Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 282 | திங்கட்கிழமை | ஆவணி 20 ஆம் நாள் 06 செப்ரெம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052

பக்கங்கள்: 20 விலை : ரூ.30 செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## மேலும் 189 பேர் சாவு மொத்தக் காவு 10,000

கொழும்பு, செப். 6
இலங்கையில் மேலும் 189 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர்.
இதற்கமைய நாட்டில் இதுவரையில் 19

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு ஆவணங்களை அனுப்புவதற்கான

# கால அவகாசம் முடிந்து 2 வாரங்கள்;

# பூச்சுற்றுகின்றனவா தமிழ்க் கட்சிகள்?

**இலங்கையில் இருந்து இதுவரை எந்தவொரு ஆவணமும் ஐ.நாவுக்கு அனுப்பப்படவில்லை**
**சர்வதேச மனித உரிமைச் செயற்பாட்டாளர் வெளியிட்ட அதிர்ச்சித் தகவல்கள்**

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 6
ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடரில், பாதிக்கப்பட்ட தரப்புகள் சார்பில் அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் ஓகஸ்ட் 22ஆம் திகதி நள்ளிரவோடு முடிவடைந்துவிட்டது. ஆனால் இந்தக் கால எல்லைக்குள் இலங்கையிலிருந்து தமிழர்கள் சார்பில் எந்தவொரு அறிக்கையும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. 19

## நல்லூர்க் கந்தனுக்கு நேற்று தேர்த்திருவிழா



19

## கொழும்பின் அராஜகம் ஐ.நாவில் அம்பலப்படும்

சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, செப். 6
'இலங்கை மீதான ஐ.நா. தீர்மானத்தின் பரிந்துரைகளைப் புறந்தள்ளிவிட்டுத் தான்தோன்றித்தனமாக அரசு ஆட்சி நடத்துகின்றது. அரசின் இந்த அராஜகங்களை அறிக்கையூடாக ஐ.நா. 19

ஜெனிவா விவகாரத்தைப் பயன்படுத்தி

## கூட்டமைப்பை எவராலும் பிளவுபடுத்தவே முடியாது

சம்பந்தன் திட்டவட்டம்



கொழும்பு, செப். 6
'ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளருக்கு அறிக்கை அனுப்பும் விவகாரத்தைப் பயன்படுத்தித் தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சியான 19

தமிழரசுக் கட்சியின் அறிக்கை

## புலிகளின் போர்க்குற்றத்தை ஐ.நாவில் வலியுறுத்துகிறதா?

இன்றே இறுதி முடிவாம்

கொழும்பு, செப். 6
புலிகளின் போர்க்குற்றம் பற்றியும் தமிழரசுக் கட்சியால் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது என்று பூதாகரமான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பில் 19

## மூச்செடுக்க சிரமப்பட்டவர் அம்புலன்ஸில் உயிரிழப்பு

மருத்துவமனைக்கு செல்லும்போது துயரம்

யாழ்ப்பாணம், செப். 6
மூச்செடுக்கச் சிரமப்பட்ட பெண்ணொருவர் நோயாளர் காவுவண்டியின் மூலம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார். மூளாய் பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய பெண்ணே இவ்வாறு 19

நெருக்கடிகள் ஏற்பட்டால்

## கொரோனா சடலங்களை எரியூட்ட பொறிமுறைகள் தயார்நிலையில்!

யாழ்ப்பாணம் போதனாவின் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 6
முன்னாயத்த நடவடிக்கைக்காக நாட்டில் வெவ்வேறு இடங்களில் உள்ள சடலங்களை எரியூட்டும் நிலையங்களுடனும் 19

## தமிழ் மக்களுக்காக போராடியோரை காட்டிக்கொடுக்கின்றது கூட்டமைப்பு!

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 6
தமிழ் மக்களுக்காக போராடியவர்களை காட்டிக்கொடுக்கும் நடவடிக்கையில் கூட்டமைப்பு ஈடுபட்டு வருகின்றது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. அந்தக் கட்சியின் பேச்சாளர் சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ் 15

இந்திய மீனவர்கள் அத்துமீறல்

## தொடர் போராட்டத்துக்கு வடக்கு மீனவர்கள் தயார்

யாழ்ப்பாணம், செப். 6
இந்திய மீனவர்களின் எல்லைதாண்டிய மீன்பிடியைத் தடுப்பதற்கு இலங்கை அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நாங்கள் 15

## அரசினது நிலைப்பாடு ஐ.நாவுக்கு அறிவிப்பு!

தமிழ்க் கட்சிகளின் அறிக்கைகளை தூக்கி வீசுங்கள் என்கிறார் பீரிஸ்

கொழும்பு, செப். 6
'ஜெனிவாவில் இம்மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கை மீதான 15

## தமிழரசுக் கட்சியின் இரட்டை வேடமே புலிகளின் போர்க்குற்றக் கருத்துக்கள்!

சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 6
தமிழீழ விடுதலைப் புலிகளும் போர்க்குற்றம் புரிந்தனர் என்ற கருத்துப்பட அறிக்கைகளைத் தயாரித்துள்ள தமிழரசுக் கட்சி, இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் கிட்டத்தட்ட ஒரே வகைக்குள்தான் அடக்கிவிடப் பார்க்கின்றது. இந்தச் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெனிவா விவகாரம்

# வெளிநாடுகளை வளைத்துப்போட 13 பக்கத்தில் அரசு கடிதம்

**கொழும்பு, செப். 6**

**ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 13 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸால் கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதுவர்களுக்கு 13 பக்கங்களில் சிறப்புக் கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இலங்கை அரசால் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக குறித்த கடிதத்தில் விவரிக்கப்பட்டுள்ளது எனவும் தெரியவருகின்றது. குறிப்பாக புலிகள் அமைப்பின் சந்தேகநபர்கள் விடுவிப்பு, கருத்துச் சுதந்திரம் பாதுகாப்பு, பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள நகர்வுகள் உட்பட மேலும் சில விடயங்கள் தொடர்பில் கடிதத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதுடன், எதிர்காலத் திட்டங்கள் தொடர்பிலும் பட்டியலிடப்பட்டுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

இலங்கையிலுள்ள ஐ.நா. அலுவலகம் உட்பட அதன் கிளை அலுவலகங்களின் பிரதானிகளுக்கும் மேற்படி கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

'இலங்கையானது அனைத்து நாடுகளுடனும் நட்புறவையே பேணுகின்றது.

எந்த நாட்டுக்கும் தீங்கு விளைவித்ததில்லை. சுமையாக இருந்ததும் கிடையாது. ஆனாலும் வருடா வருடம் ஜெனிவாத் தொடரின் போது இலங்கை இலக்கு வைக்கப்படுகின்றது. கடும் விமர்சனங்களும், குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன. இதற்கான உண்மையான காரணம் என்ன? மனித உரிமை விவகாரமா அல்லது இதன் பின்னணியில் அரசியல் நிகழ்ச்சி நிரல் ஏதேனும் உள்ளதா?" என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அண்மையில் கேள்வி எழுப்பியிருந்தார்.

அத்துடன், ஜெனிவாத் தொடரில் இம்முறை சாதகமான சூழ்நிலை ஏற்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டிருந்தார். (ஒ,44)



# வெற்றிலைக்கேணியில் 227 கிலோ கஞ்சா மீட்பு!

யாழ்ப்பாணம், செப்.6

வெற்றிலைக்கேணியில் நேற்று அதிகாலை 227 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என்று கடற்படையினர் தெரிவித்தனர். கஞ்சா கடத்தப் பயன்படுத்தப்பட்டது என்று கருதப்படும் டிங்கிப் படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடற்படையினர் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையில் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதி செய்யப்பட்ட நிலையில் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

கஞ்சாவைக் கடத்தியவர்கள் தப்பிச் சென்றுள்ள நிலையில், கஞ்சா பொதிகள் கடற்படையினரால் மீட்கப்பட்டு காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டன. விசாரணைகளின் பின்னர் அவை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படும் என்று கடற்படையினர் தெரிவித்தனர். (எ-27)

## தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

கொடிகாமம், செப். 6

தூக்கில் தொங்கிய நிலையில், குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கொடிகாமம் கச்சாய் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது. கச்சாய் தெற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த நல்லையா மனோகரன் (வயது - 56) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். கொடிகாமம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். பி.சி.ஆர் .பரிசோதனை மற்றும் விசாரணைக்காக, சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (த-159)

# கிளிநொச்சியில் நாளை இரண்டாவது டோஸ்

கிளிநொச்சி,செப்.6

கிளிநொச்சி மாவட்டத்தில் நாளை முதல் கொரோனாத் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்படும் என்று கிளிநொச்சி பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார். அதற்கமைவாக முதலாவது டோஸ் பெற்றுக் கொண்டவர்கள், அருகில் உள்ள தடுப்பூசி நிலையத்துக்குச் சென்று தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், புனித திரேசா பெண்கள் கல்லூரி, உருத்திரபுரம் ஆரம்ப மருத்துவமனை, வட்டக்கச்சி மத்திய கல்லூரி, அக்கராயன் மகா வித்தியாலயம், பாரதிபுரம் மகா வித்தியாலயம், புன்னை நீராவி அ.த.க. பாடசாலை, பிரமந்தனாறு கிராம சேவையாளர் அலுவலகம், தருமபுரம் மத்திய கல்லூரி,கல்மடுநகர் அ.த.க. பாடசாலை, முருகானந்தா அ.த.க. பாடசாலை, பரந்தன் கிராம சேவையாளர் அலுவலகம், முழங்காவில் மருத்துவமனை, பூநகரி மருத்துவமனை, வேரவில் மருத்துவமனை, பளை மத்திய கல்லூரி ஆகிய தடுப்பூசி நிலையங்களில் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தடுப்பூசி பெற்றுக் கொள்வோர் முதல் டோஸ் பெற்றுக் கொண்ட அட்டைகளை எடுத்துச் செல்ல வேண்டும். அத்துடன் முகக்கவசங்களை உரியமுறையில் அணிந்து, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஒ,4,6)

# ஊடகவியலாளர் மீது பொலிஸார் தாக்குதல்

கொழும்பு, செப். 6

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் அம்பாறை அட்டாளைச்சேனை ஷாஹிர் ஹான் பாருக் எனும் சுதந்திர ஊடகவியலாளர் மீது அக்கரைப்பற்று பொலிஸார் கண்மூடித்தனமாக தாக்கி, ஒளிப்பதிவுக் கமராவை உடைத்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் செய்தி சேகரிக்கச் செல்வதற்காக அட்டாளைச்சேனை பிரதான வீதிக்கு அருகாமையிலுள்ள தனது வீட்டுக்கு முன்னால் நின்று கொண்டிருந்தபோது அந்தப் பகுதியால்சென்ற அக்கரைப்பற்று பொலிஸார் குறித்த ஊடகவியலாளரையும் அவரது தம்பியையும் தாக்கியுள்ளனர். அட்டாளைச்சேனையில் தனது செய்திசேகரிப்பு நடவடிக்கைக்குச் செல்ல வீட்டில் இருந்து வெளியேறும் போது முகக்கவசம் சரியான முறையில் போடவில்லை என்பதற்காக அவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (த-இ)

# சிறந்த தடுப்பூசி எது என்று ஆராயாமல் கிடைப்பதை ஏற்றி உயிரைக் காப்பாற்றவும்

## ஹொங்கொங் பேராசிரியர் அறிவுரை

கொழும்பு, செப். 6

கொரோனா காரணமாக உயிரிழந்தவர்களில் இரண்டு தடுப்பூசிகளும் செலுத்தியோர் 3 சதவீதமானவர்களே. எனவே, கொரோனா உயிரிழப்பைத் தடுப்பதற்கு இரண்டு தடுப்பூசிகளையும் செலுத்திக் கொள்வதே ஒரேவழி. இவ்வாறு ஹொங்கொங்கில் வசிக்கும் வைரஸ் ஆராய்ச்சியாளர் பேராசிரியர் மலிக் பீரிஸ் தெரிவித்தார். இலங்கையில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்குப் பொருத்தமான வழிமுறைகள் தொடர்பாக ஆராயும் மெய்நிகர் கலந்துரையாடலின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

சர்வதேச வணிகர் அமைப்பு ஒன்றின் இலங்கைக் கிளையினரால் ஒழுங்கு படுத்தப்பட்ட இந்த மெய்நிகர் கலந்துரையாடலில் மருத்துவத்துறை விற்பன்னர்களுடன், வர்த்தக முன்னோடிகள், சுற்றுலாத்துறை சார்ந்தோர் மற்றும் அமைச்சர் நாமல் ராஜபக்ச ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

இலங்கையில் கொரோனா காரணமாக உயிரிழப்போரில் 83 சதவீதமானவர்கள் 50 - 80 வயதுக்குட்பட்டவர்கள். எனவே, இந்த வயதுப்பிரிவினர் அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டுவிட்டால் கொவிட் உயிரிழப்புக்களைப் பெருமளவு கட்டுப்படுத்திவிடலாம்.

தற்போது இந்த வயதுப் பிரிவினர் பலரும் தடுப்பூசி செலுத்தாமல் இருந்து வருகின்றனர் என்பதை அண்மைய கொரோனா உயிரிழப்புக்கள் காட்டுகின்றன. இதற்கான காரணத்தை ஆராய்ந்து இந்த வயதுப் பிரிவினருக்குத் தவறாமல் இரண்டு தடுப்பூசிகளையும் வழங்க ஏற்பாடு செய்யவேண்டும்' என்றார்.

உங்கள் அபிப்பிராயப்படி எந்தத் தடுப்பூசியைச் செலுத்திக்கொள்வது நல்லது என்று அவரிடம் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர்,

எந்தத் தடுப்பூசி உங்களுக்குக் கிடைக்கிறதோ, அந்தத் தடுப்பூசியே நல்லது' என்று அவர் பதிலளித்தார். எல்லாத் தடுப்பூசிகளுமே ஒரே விதமான தொழில்நுட்பத்தையே கையாள்கின்றன என்று சுட்டிக்காட்டிய அவர், எனவே, எந்தத் தடுப்பூசி சிறந்தது என்று ஆய்வுசெய்து காலத்தை வீணடிக்காமல், கிடைக்கின்ற தடுப்பூசியைப் பெற்று உயிராபத்தைத் தவிர்த்துக்கொள்ள அனைவரும் முயலவேண்டும் என்றும் அவர் வலியுறுத்திக் கூறினார். (ஒ,22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குகமயம்
நல்லைக் கந்தனுக்கு
இன்று (06.09.2021) திங்கட்கிழமை
தீர்த்தத் திருவிழா



திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :

மைதிலி நகைமாடம்
(தனியார்) நிறுவனம்
தங்க நகை வியாபாரி
89V கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021 222 7902

யாழ் மைதிலி
ஜுவலர்ஸ்
தங்க நகை வியாபாரி
இல. 79Z, செட்டித் தெரு,
கொழும்பு - 11
தொ.பே.இல. 011 239 6239






## நல்லூரின் கந்தசாமி...

நல்லையிலே கோயில் கொண்ட கந்தசாமி – அவன்
நமதுதமிழ் இனத்தவரின் சொந்தச்சாமி
வெல்லுமொரு வடிவேலே அவனின் தோற்றம் – தன்னை
வேண்டுவோர்க்குத் தந்திடுவான் நல்ல மாற்றம்
தொல்லைதரும் துயர்பிணிக்கு அவனேகாலன் – தோகை
மயிலேறி விளையாடும் சிவனின்பாலன்
நல்லதமிழ்ச் சொற்களென்ற பூவையெடுப்போம் – அவன்
திருக்கழுத்திற் சூட்டக்கவி மாலைதொடுப்போம்!


**சின்னையா சிவபாலன்**










நல்லூர் கந்தசுவாமி ஆலய இரதோற்சவம் நேற்றுக் காலை பக்திபூர்வமாக நடைபெற்றது. கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக பக்தர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. வழமைபோன்று பூசை வழிபாடுகள் இடம்பெற்று, உள்வீதியிலேயே தேர் இழுக்கப்பட்டது.

# தேர்த்திருவிழாவை முன்னிட்டு நல்லூரில் பாதுகாப்பு இறுக்கம்

யாழ்ப்பாணம், செப்.6

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத் தேர்த்திருவிழா நேற்று நடைபெற்ற நிலையில், ஆலயச் சூழலில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. தற்போதைய கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக இம்முறை நல்லூர் ஆலய வருடாந்தத் திருவிழாவுக்கு பக்தர்கள் அனுமதிக்கப்படவில்லை.

நேற்று தேர்த்திருவிழா ஆலய உள் வீதியில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடைபெற்றது. தேர்த் திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் அதிகளவான பொலிஸார் குவிக்கப்பட்டுப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

வீதித் தடைகள் அமைக்கப்பட்டு, வீதியின் குறுக்கே பஸ் நிறுத்தப்பட்டு மக்கள் ஆலயத்துக்கு [illegible]தது. ஆலயச்சூழலுக்குள் பொதுமக்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை.(எ-26)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 200 குடும்பங்களுக்கு கியூமெடிக்கா உதவி

முல்லைத்தீவு, செப். 6
தற்போதைய பொதுமுடக்கத்தால், வாழ்வாதாரத்தை இழந்துள்ள 200 குடும்பங்களுக்கு, கியூமெடிக்கா இன்டர்நேஷனல் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.
தலா 2 ஆயிரம் ரூபா பெறுமதியான 200 பொதிகள் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. (ஓ-4-115)

# வனவளத்திணைக்களத்தின் அடாவடி தொடர்கின்றது

முல்லைத்தீவு, செப். 6

**கரைதுறைப்பற்று தண்ணிமுறிப்புக் கிராமத்தில் தனது சொந்தக் காணியில், பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்தவருக்கு எதிராக, வனவளத் திணைக்களம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.**

1984ஆம் ஆண்டில் கரைதுறைப்பற்று தண்ணிமுறிப்புக் கிராமத்தில் இருந்து மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்தனர். 2010 ஆம் ஆண்டின் பின்னரும் அவர்கள் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை. எனினும் தமது காணிகளில் பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இந்த வருடமும் நெற்செய்கையின் பின்னர் நிலக்கடலைச் செய்கையை மேற்கொண்டனர். தற்போது வேறு பயிர்ச்செய்கைக்கான நிலத்தை பண்படுத்தி வருகின்றனர்.
அவ்வாறு நிலத்தைப் பண்படுத்திக் கொண்டிருந்த உழவியந்திரத்தின் சாரதிக்கு எதிராக, முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். சாரதி தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
அவரது உழவியந்திரம் குருந்தூர் இராணுவ முகாமில் நிறுத்தப்பட்டுள்ளது.
வனவளத் திணைக்களத்தால் கற்கள் நடுகை செய்யப்படாத, தங்களுக்குச் சொந்தமான காணியில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்த நபருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்துள்ளமை, வனவளத் திணைக்களத்தின் அடாவடித்தனத்தை வெளிப்படுத்தியுள்ளது என்று தண்ணிமுறிப்பு மக்கள் தெரிவிக்கின்றனர். (ஓ-4-13)

# சுதேச வைத்தியத்தின் தரத்தை உலகில் நிரூபித்துக்காட்டுங்கள்

*அதிகாரிகளுக்கு பிரதமர் மஹிந்த அறிவுறுத்து*



கொழும்பு, செப். 6
ஆராய்ச்சி முடிவுகளை உலகுக்கு முன்வைத்து சுதேச வைத்தியத்தின் தரத்தை நிர்ணயிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளேன் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
மொனராகலை, சிரிகலவில் அமைக்கப்பட்டுள்ள ராஜபுர ஆயுள்வேத வைத்தியசாலையை திறந்துவைக்கும் நிகழ்வில், அலரி மாளிகையில் இருந்து காணொலி தொழில்நுட்பம் ஊடாக உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவிக்கையில்:
எமது முன்னோர்கள் பாதுகாத்த, எமது சுதேச சிகிச்சை முறைகளை அவ்வாறே எமது எதிர்காலத் தலைமுறையினருக்கு பாதுகாத்து கையளிப்பது போன்றே அதனை சர்வதேசத்துக்கு அறிமுகப்படுத்துவது காலத்தின் தேவையாகும்.
சுதேச வைத்தியம் என்பது எமது கலாசாரத்தின் ஒரு பகுதியாகும். அன்று மேற்கத்தேய வைத்தியமுறை பிரசித்தி பெறாத காலப்பகுதியில் சுதேச மருத்துவத்தின் மூலமே மக்கள் முழுமையாகக் குணப்படுத்தப்பட்டனர்.
எவ்வாறான நோய்களுக்கும் அன்று கிராம, நாட்டு வைத்தியர்களாலேயே சிகிச்சை அளிக்கப்பட்டது. இன்றும் நாட்டு வைத்திய பரம்பரையில் உருவாகிய நாட்டு வைத்தியர்கள் காணப்படுகின்றனர்.

**தற்போதிருந்து தயாராகவேண்டும்**

அதேபோன்று அதற்கு மேலாக முன்னேறிய ஆயுள்வேத வைத்தியர்களும் உள்ளனர்.
சுதேச வைத்தியம் இந்தக்காலப்பகுதியில் உலகம் முழுவதும் பிரசித்திபெற்று வருகிறது. அதன் மூலம் நாம் உச்ச பயனைப் பெற வேண்டுமாயின் தற்போதிருந்தே அதற்குத் தயாராக வேண்டும்.

**நரம்பியல் நோய்க்கு சிகிச்சை நிலையம் விரைவில்**

பார்கின்சன், பக்கவாதம் போன்ற நரம்பியல் நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சுதேச வைத்திய மத்தியநிலையமொன்றை நமது நாட்டில் உருவாக்க நாம் ஏற்கனவே திட்டமிட்டுள்ளோம்.
மருந்துவகுணம் கொண்ட மரங்கள், இலைகளை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் நச்சற்ற உணவுப் பண்டங்கள், மருந்துப் பொருள்கள் மற்றும் அழகுசாதனப் பொருள்களுக்கும் உலகளாவிய ரீதியில் அதிக கேள்வி காணப்படுவதை நாம் மறந்துவிடக்கூடாது. அந்தக் கேள்வியை வெற்றி கொள்ள முடியுமாயின் அது நாட்டின் பொருளாதாரத்துக்கு மிகப்பெரிய பலமாகும்.
இன்று உண்மையில் சரியான வைத்தியரை தெரிவுசெய்வதில் மக்கள் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். சிலர் வைத்தியர்கள் போன்று போலியாக செயற்பட்டு மக்களை ஏமாற்றி வருகின்றனர். மேலும் சிலர் தமது கல்வியறிவுடன் தொடர்பற்ற நோய்களுக்கு சிகிச்சை அளித்து நோயாளர்களை துன்பத்தில் தள்ளுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் சமூகத்திலிருந்து விலகவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.
அன்று சுதேச மருத்துவம் பணத்தை எதிர்பார்த்து மேற்கொள்ளப்பட்ட ஒரு விடயமல்ல - என்றார். (த).

காலத்திற்கேற்ப மாற்றம்
கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்
வழங்கும் சிறப்பு செயற்திட்டம்
வீட்டில் இருந்தபடியே ஓடர்கள் வழங்கும் வாய்ப்பு
WhatsApp | Viber | Mail
குறைந்த எண்ணிக்கையிலான அச்சுப்பதிப்புக்கள்
திருமண விழா, பூப்புனித நீராட்டு விழா, பிறந்தநாள் மற்றும் மங்கலகரமான நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்கள் (05 லிருந்து 50 வரை)
கண்ணீர் அஞ்சலி, நினைவு மலர்கள், டியூறோ படங்கள், கல்லில் பெயர் பதித்தல், அந்தியேட்டி அழைப்பிதழ்கள் (10 லிருந்து 100 வரை)
துண்டுப் பிரசுரங்கள், போஸ்ரர்கள் (10 லிருந்து 100 வரை)
அனைத்தையும் ஒரே கூரையின்கீழ் பெற்றுக் கொள்ள முடியும்
FREE DELIVERY
அனைத்துத் தேவைகளுக்கும் அழையுங்கள்
தொடர்புகளுக்கு : 077 0111 035 / 036 / 040
077 0111 029 (கிளிநொச்சி)
HOTLINE :- 0777 27 50 83
கலர் பிறிண்ட்
பனர் பிறிண்ட்
லேசர் பிறிண்ட்
மக் பிறிண்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிளிநொச்சி ஊடக மையத்தால் கொரோனா ஒழிப்பு நடவடிக்கை

கிளிநொச்சி ஊடக மையத்தின் ஏற்பாட்டில், "பாதுகாப்பாக இருங்கள்" எனும் தொனிப்பொருளில் கொரோனா ஒழிப்பு நடவடிக்கைகள் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டன.

ஆரம்ப நிகழ்வாக கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்தவர்களுக்கு ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், பாதிக்கப்பட்டவர்கள் குணமடைய விசேட வழிபாடும் இடம்பெற்றன. கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற வழிபாட்டைத் தொடர்ந்து, புனித திரேசா ஆலயத்தில் வழிபாடு இடம்பெற்றது. தொடர்ந்து கிளிநொச்சி கல்வி, கலாசார அபிவிருத்தி அமையத்துடன் இணைந்து சுகாதாரப் பொருள்கள் வழங்கப்பட்டன. கர்ப்பிணிகள், பொது இடங்களில் நடமாடியவர்கள் மற்றும் வர்த்தகர்கள் ஆகியோருக்கு முகக்கவசங்கள் மற்றும் தொற்று நீக்கித் திரவங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் தனிநபர் இடைவெளியைப் பின்பற்றி தொற்றிலிருந்து பாதுகாப்பாகச் செயற்படுமாறு அறிவுறுத்தல்களும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. (ஒ-4-113)

# கடல் வழியாகக் கனடா பயணம் தமிழகத்தில் கடும் விசாரணை!



**சென்னை, செப்.6**

**தமிழக கடல் வழியாக கனடாவுக்குத் தப்பிச் செல்ல முயன்ற இலங்கைத் தமிழர்களுக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள் தொடர்பாக தேசிய புலனாய்வு அமைப்பு இராமநாதபுரத்தில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.**

இலங்கை புத்தளம் பகுதியைச் சேர்ந்த 24 ஆண்கள், 2 பெண்கள், ஒரு குழந்தை என 27 பேர் படகு ஒன்றின் மூலம் கடல் வழியாக கடந்த ஜூன் மாதம் 11 ஆம் திகதி தமிழகத்தின் தூத்துக்குடிக்குச் சென்றுள்ளனர்.

கேரளா வழியாக கனடா செல்ல திட்டமிட்டு மதுரையில் தங்கியிருந்த 27 பேரையும் இராமநாதபுரம், மதுரை கியூ பிரிவு பொலிஸார் கைது செய்தனர்.

அவர்கள் தற்போது நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அதன்பின்னர் இலங்கையில் இருந்து கனடாவுக்கு தப்பிச்செல்ல மங்களூருவில் பதுங்கியிருந்த இலங்கைத் தமிழர்கள் 32 பேரை மங்களூர் கியூ பிரிவு பொலிஸார் ஜூன் மாதம் 11ஆம் திகதி மாலை கைது செய்தனர்.

இவர்களுக்கு இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அருகே மரைக்காயர் பட்டணத்தில் சிலர் அடைக்கலம் கொடுத்து வேதாளை கடற்கரையில் இருந்து மர்மப் படகில் இலங்கைக்கு தப்பிச்செல்ல உதவினர் என்று விசாரணையில் தெரியவந்தது.

அதையடுத்து இலங்கைத் தமிழர்கள் சிலரை மங்களூரு தனிப்படையினர் ஜூன் மாதம் 20 ஆம் திகதி அழைத்து வந்து வேதாளை கடல் பகுதியில் நேரடி விசாரணை மேற்கொண்டனர்.

பல்வேறு கோணங்களில் தொடர்ந்து நடைபெற்று வந்த இந்த விசாரணை தேசிய புலனாய்வு அமைப்புக்கு அண்மையில் மாற்றப்பட்டது.

அதையடுத்து தேசிய புலனாய்வு அமைப்பு அதிகாரிகள், இராமநாதபுரம் வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

இலங்கைத் தமிழர்களுக்கு அடைக்கலம் கொடுத்தார் என்று சந்தேகிக்கப்பட்ட ஒருவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# கொலை, கடத்தல், அடக்குமுறையை நியாயப்படுத்தி அரசு அராஜகம்!

## போராடத் தயாராகுமாறு அழைக்கிறது அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

கொழும்பு, செப். 6

அரச சேவைகள் பலவற்றை அத்தியாவசிய சேவைகள் என பெயரிட்டு ஆர்ப்பாட்டம் செய்தல், வேலை நிறுத்தம் செய்தல் மற்றும் அத்தகைய செயல்களுக்கு ஒத்துழைத்தல் என்ற வகையில் பல குற்றங்களை அறிமுகம்செய்து அவசரகால சட்டத்தின்கீழ் தொழில் செயற்பாட்டாளர்களை கைதுசெய்ய பின்புலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த அனைத்து விடயங்களையும் பார்க்கும்போது, அரசு பெருந்தொற்றை பயன்படுத்தி கடத்தல், கொலைசெய்தல் உட்பட அடக்குமுறையை சமூகத்தில் மீண்டும் நியாயப்படுத்திக் கொண்டிருப்பது தெரிகிறது. -இவ்வாறு குறிப்பிட்டுள்ளது, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.

மக்களின் நியாயமான ஆர்ப்பாட்டங்கள், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றுக்கு தடை போடும் அவசரகால சட்ட விதிகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஒன்றியம் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பெருந்தொற்றை கட்டுப்படுத்த, உயிரிழப்புகளை தடுக்க அரசு தவறிவிட்டது. அரசின் இந்தத் தோல்வியின் காரணமாக சரியான சிகிச்சை வசதிகளின்றி மக்கள் உயிர்களால் இழப்பீடு செலுத்துகின்றனர்.

நிலவிய பொருளாதார, அரசியல் நெருக்கடிகள் பெருந்தொற்றின் பரம்பலோடு மிகவும் தீவிரமடைந்தமையால், மக்கள் தொடர்ந்தும் துன்பத்துக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்தப் பெருந்தொற்றைப் பயன்படுத்தி பெருநிறுவனங்கள் கோடிக் கணக்கில் இலாபம் பெறும்போது, பெரும்பான்மையான மக்கள் தமது நாளாந்த வாழ்வாதாரத்தையே இழந்துள்ளனர். பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டு ஒன்றரை வருடங்களுக்கும் மேல் கடந்துள்ள நிலையில் கல்வி சீரழிந்துள்ளது. நாளுக்குநாள் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகள் தாங்க முடியாதளவுக்குத் தீவிரமடைந்துள்ளன. இதனால் கடந்த காலங்களில் மக்கள் மத்தியிலிருந்த அழுத்தம், எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்யுமளவுக்கு வெடித்தது. உயிர்கொல்லிப் பெருந்தொற்றுக்கு மத்தியில் அரசு கொடுத்த அழுத்தம் காரணமாக மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். என்றாலும், இந்தப் பிரச்சினைகளுக்கு பெருந்தொற்று நிலைமையை பயன்படுத்தி மக்களை அடக்குவதைக் கொண்டு அரசு பதிலளித்து வருகிறது.

### ஊடகவியலாளர்கள் மீது தொடரும் அடக்குமுறை

அரசின் செயற்பாடுகள் சம்பந்தமாக வெளிச்சத்துக்கு கொண்டுவரும் ஊடகவியலாளர்கள் மீதும் அடக்குமுறையின் கரங்கள் நீள்கின்றன. அரசு மக்களிடமிருந்து மறைத்த பல்வேறு தகவல்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்த ஊடகவியலாளர்கள் சமீபத்தில் சிறைப்படுத்தலுக்கு, விசாரணைகளுக்கு உட்படநேர்ந்தது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் ஊடகவியலாளர் கீர்த்தி ரத்நாயக தடுத்து வைக்கப்பட்டுள்ளார். ஊடகவியலாளர் துஷார வன்னியாரச்சியின் வீட்டுக்குச் சென்ற குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் அதிகாரிகள் சோதனைகளில் ஈடுபட்டனர். குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் அதிகாரிகள் தமிழன் இணையத்தின் ஆசிரியரின் வீட்டுக்குச் சென்று விசாரணை நடத்தியுள்ளனர்.

மக்களுக்கு தகவல்களை வெளிப்படுத்தும் ஊடகவியலாளர்களை அடக்குமுறை செய்யும், அச்சுறுத்தும் இவ்வாறான பல சம்பவங்கள் நடந்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

### சமூக வலைத்தளத்திலும் உரிமையை மறுக்கும் அரசு

இவைமாத்திரமல்ல, சமூக வலைத்தளங்களில் கருத்து தெரிவிப்பதும் சிறை செல்ல, விசாரணைகளுக்கு முகம்கொடுக்க, கேள்விகளுக்குப் பதில் சொல்ல காரணமாகியுள்ளது. சுகாதார சேவையின் பிரச்சினைகள் சம்பந்தமாக முகநூல் குறிப்பொன்றின் ஊடாக சில விடயங்களைக் முன்வைத்த மருத்துவர் நஜித் இந்திக குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் விசாரணைகளுக்கு முகம் கொடுத்துள்ளார்.

தடுப்பூசி ஏற்றல் சம்பந்தமான பிரச்சினைகள் குறித்து சமூக ஊடகங்களில் குறிப்பெழுதிய ஓர் இளைஞர் பொலிஸுக்கு சென்று விளக்கமளிக்க நேர்ந்துள்ளது. தடுப்பூசி பெற்றுக் கொள்ளாத ஆட்களைத் தேடி பொலிஸ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென ஊடகங்களில் கூறும் அதேநேரம் மாத்தறை வெலிகம பகுதியில் தடுப்பூசி பெற்றுக் கொள்வதற்கு வந்த மக்கள் பொலிஸாரால் தாக்கப்பட்டனர்.

சமூக ஊடகங்களில் கருத்திட்டமை சம்பந்தமாக வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் சுமார் 80 இளைஞர்களும், யுவதிகளும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ், அவசரகால விதிமுறைகளை நடைமுறைப்படுத்தியும், அத்தியாவசியச் சேவைகள் எனப் பெயரிட்டும் ஜனாதிபதியால் வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது. இது, இதுவரை கொண்டுவரப்பட்ட அடக்குமுறைத் திட்டத்தின் எதிர்கால நீட்சியாகும்.

### மக்கள் மீது அரசுக்கு கொஞ்சமும் அக்கறையில்லை

அரிசி பருப்பு உட்பட அத்தியாவசியப் பொருள்கள் பலவற்றின் விலை தாங்க முடியாதளவு அதிகரித்துள்ளமைக்கான பொறுப்பை அரசு ஏற்கவேண்டும். பெரியளவில் மோசடிகள் செய்யவும், பொருள்களை பதுக்கவும் ஒத்துழைப்பு வழங்கியது மக்களல்ல் அரசே.

குறைந்தபட்சம் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்தக்கூட அரசு தவறியுள்ளது. அரசுக்குத் தேவைப்படுவதெல்லாம் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதோ, மக்களுக்கு நிவாரணம் வழங்குவதோ அல்ல, எழுச்சிபெறும் மக்கள் எதிர்ப்பை அடக்குவது தான். ஆர்ப்பாட்டங்கள் செய்வது மாத்திரமல்ல, கருத்துச் சுதந்திரம், உண்மையான தகவல்களை வெளிப்படுத்தல் கூட அடக்குமுறைக்கு காரணமாக உள்ளது.

### போராடத் தயாராகுங்கள்

எனவே, இந்த அடக்குமுறையை நாம் வெறுப்புடன் கண்டிப்பதோடு, இதற்கு எதிராக ஒன்றிணையுமாறும், போராடுமாறும் அனைத்து மக்களிடமும், அனைத்து முற்போக்காளர்களிடமும் கேட்டுக் கொள்கிறோம். அதேபோன்று, இந்த அடக்குமுறையை உடனடியாக திரும்பப் பெறவேண்டுமென அரசை வலியுறுத்துகிறோம். இந்த அரச பயங்கரவாதத்துக்கு எதிராக மாணவர் இயக்கம் என்ற வகையில் ஏனைய தொழிற்சங்க அமைப்புகளுடனும் இணைந்து எழுந்து நிற்போம், போராடுவோம்.

- என்றுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தனிநபர்கள் சிலரால் அடாத்தாக காடழிப்பு

## மக்கள் விசனம்

**முல்லைத்தீவு,செப்.6**

**முல்லைத்தீவு ஐயன்கண்குளத்தில், எவ்வித அனுமதியும் இன்றி, சுமார் 100 ஏக்கருக்கு மேற்பட்ட காடு, தனி நபர்கள் சிலரால் அடாத்தாக துப்புரவு செய்யப்பட்டுவருகின்றது.**

ஐயன்கண்குளத்தில் 23 தொடக்கம் 28 வரையான பகுதிகளில் நீர்ப்பாசன வாய்க்கால்கள் அமைக்கப்படாமல் இருந்தன.

1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் காணிகளைப் பெற்றுக் கொண்டவர்கள், தமது காணிகளைத் துப்புரவு செய்து பயிர்ச்செய்கையில் ஈடுபடமுடியாத நிலைமை காணப்பட்டது.

காணிக்குரியவர்கள் மாவட்டத்திலும், பிற இடங்களிலும் வாழ்ந்து வரும் நிலையில், தற்போதைய முடக்க காலத்தைப் பயன்படுத்தி சிலர் அடாத்தாக அந்தக் காணிகளைத் துப்புரவு செய்து வருகின்றனர். காணிக்குரியவர்கள் இருக்கின்றபோதும், எவ்வித ஆவணங்களும் இன்றி, பிரதேச செயலகத்தின் அனுமதி இல்லாமலும் தனி நபர்கள் காணிகளை அடாத்தாக கையகப்படுத்த முயற்சிக்கின்றனர் என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஒ-4-13)

# கிளிநொச்சி மருத்துவமனையில் சடலங்களுக்கு குளிரூட்டல் வசதி

கிளிநொச்சி,செப்.6

கிளிநொச்சி மருத்துவமனையில் தேங்கும் சடலங்களுக்கு, குளிரூட்டல் வசதியை மேற்கொள்வதற்கான கொள்கலன் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர், கடற்றொழில் அமைச்சர் மற்றும் மாவட்டச் செயலர் ஆகியோரிடம் மருத்துவ நிர்வாகம் விடுத்த கோரிக்கை தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் தற்போது 6 தொடக்கம் 7 வரையான உடலங்களைப் பேணுவதற்கான வசதியே காணப்படுகின்றது.

தற்போது கொரோனாத் தொற்றால் இறப்புக்கள் அதிகரித்துள்ளதால், சடலங்களை சிலநாள்கள் மருத்துவமனையில் வைத்திருக்கவேண்டிய தேவை அதிகரித்துள்ளது.

அதனால் சடலங்களைக் குளிரூட்டிப் பேணுவதற்கு கொள்கலனை வழங்குமாறு மருத்துவமனை நிர்வாகம் கோரிக்கை விடுத்திருந்தது.


மாவட்டச் செயலர் அதற்கான வுசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

அதற்கமைவாக கிளிநொச்சி மாவட்ட பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி ஆகியோர் நேரில் சென்று குளிரூட்டல் வசதியை மேற்கொள்வதற்கான கொள்கலனைப் பார்வையிட்டனர்.

அந்தக் கொள்கலன் மாவட்ட மருத்துவமனை வளாகத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

கொடையாளர்களின் நிதியுதவியுடன் சடலங்களைக் குளிரூட்டுவதற்கான வசதிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

விரைவில் குளிரூட்டல் வசதி தயாராகிவிடும். சுமார் 20 வரையான சடலங்களை இதற்குள் பேண முடியும் என்று சட்ட மருத்துவ அதிகாரி தெரிவித்தார். (ஒ-4-13)



# சடலங்களை தகனம் செய்ய சுட்டதீவில் இடம் ஒதுக்கீடு

கிளிநொச்சி,செப்.6

கிளிநொச்சியில் கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை தகனம் செய்ய சுட்டதீவில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி நகரத்தில் மின்சாரம் மூலம் சடலங்களை எரிப்பதற்கான வசதிகள் இல்லை. அதற்கான கட்டடத்தை அமைப்பதற்கு 3 கோடி ரூபா வரையான நிதி தேவைப்படுகின்றது. இது தொடர்பாக ஆளுநர் உட்பட பல்வேறு தரப்பினருக்கும் தெரியப்படுத்தப் பட்டுள்ளது.

தற்போது மாவட்டத்தில் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை யாழ்ப்பாணத்துக்கும், வவுனியாவுக்கும் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. இதனால் போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

எனவே உமையாள்புரம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள சுட்டதீவில் தகனம் செய்ய தற்போது இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுட்டதீவில் 5 கிலோமீற்றர் சுற்றளவில் மக்கள் குடியிருப்புகள் இல்லை.

இதேவேளை கிளிநொச்சி மாவட்ட நோயாளர் நலன் புரிச் சங்கத்தில் உள்ள அமரர் ஊர்தியை பிரதேச சபையிடம் கையளித்தால், பிரதேசசபை சடலங்களை இலவசமாக எரியூட்டுவதற்கான போக்குவரத்து வசதியை மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4-13)

முல்லைத்தீவில்

# இரண்டு நாள்களில் 141 தொற்றாளர்கள்

## இருவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு,செப்.6

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் கடந்த இரண்டு நாள்களில் மட்டும் 141 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இருவர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய இரண்டு நாள்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மட்டும் 16 சிறுவர்கள் உள்ளிட்ட 96 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் வெலிஓயா, முல்லைத்தீவு முள்ளியவளை, ஒட்டுசுட்டான், மாங்குளம், மாந்தை கிழக்கு உள்ளிட்ட பகுதிகளிலும் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையும், மாங்குளம் தச்சடம்பன் பகுதியில் வயோதிபப் பெண் ஒருவரும் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

எனவே அறிகுறிகள் தென்படும் நோயாளர்கள், நோய்க்காவிகளாக உலாவி ஏனையவர்களுக்கும் தொற்றைப் பரப்பாமல் மருத்துவர்களிடம் சிகிச்சை பெற்றுக்கொள்வது அவசியம் என்று முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிமனை கேட்டுள்ளது. (ஓ.4.19)

# ஆளுமைமிக்க சட்டத்தரணியை இழந்துள்ளது தமிழ் இனம்

கொழும்பு, செப். 6

சட்டத்துறையில் ஆளுமைமிக்க குற்றவியல் சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா. இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து சட்டத்துறையில் கொடிகட்டிப் பறக்க வேண்டிய கௌரிசங்கரி தவராசாவை காலன் கவர்ந்து சென்றுவிட்டான். அவரை தமிழ் இனம் இழந்துள்ளது.

இவ்வாறு குறிப்பிட்டுள்ளது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கனடாக் கிளை.

இது தொடர்பில் அந்தக் கிளை வெளியிட்ட இரங்கல் செய்தியில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பிடிபட்டு ஆண்டுக் கணக்காக எதுவித விசாரணையும் இன்றி அடைத்து வைக்கப்பட்டிருந்த போராளிகள் சார்பாக கௌரிசங்கரி தவராசா நீதிமன்றங்களில் தோன்றி வாதிட்டு பலருக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தவர்.

மனித உரிமைகள் மீறப்படும்போது அவற்றுக்கு எதிராகத்தானே முன் வந்து தனது பெயரில் வழக்குகளை நீதிமன்றங்களில் தாக்கல் செய்து வாதாடியவர்.

முன்னொரு காலத்தில் சட்டத்துறையில் பல தமிழ்ச் சடத்தரணிகள் பேரோடும் புகழோடும் விளங்கியிருக்கிறார்கள். பிற்காலத்தில் அரசு தொடர்ச்சியாகக் கடைப்பிடித்த இனப்பாகுபாடு காரணமாக சட்டக்கல்லூரியில் உள்நுழையும் தமிழ் மாணவர்களது எண்ணிக்கை தேய்ந்து போய்விட்டது.

கௌரிசங்கரியின் மறைவு இரட்டிப்பு துன்பத்தைத் தருகிறது. இவர் தமிழ் அரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி.தவராசாவின் மனைவியாவார்.

சட்டத்தரணி தவராசா மற்றும் அவரது குடும்பத்தினர் உறவினர்கள், நண்பர்கள் எல்லோருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம் - என்றுள்ளது. (து)

# சமுர்த்திப் பயனாளிகளுக்கு மாதக் கொடுப்பனவு தாமதம்

கிளிநொச்சி மாவட்டத்தில் சமுர்த்திப் பயனாளிகளுக்கான மாதாந்தக் கொடுப்பனவு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களைப் போன்று கொடுப்பனவை விரைவாக வழங்க முடியவில்லை என்று மாவட்ட சமுர்த்தி உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த மாவட்டத்தில் சில வங்கிகளின் முகாமையாளர்கள் மற்றும் உதவி முகாமையாளர்கள் ஆகியோருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் உத்தியோகத்தர்கள் 26 பேர் இது வரை தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் கொடுப்பனவு வழங்கல் தாமதமடைந்துள்ளது.

அத்துடன் பயனாளிகளிடம் பெற்றுக் கொள்ளப்படும் வங்கிப் புத்தகங்கள் இரண்டு நாள்களுக்கு தொற்று நீக்கி சூரிய வெப்பத்தில் வைத்தபின்னரே பதிவுகளுக்குப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. அதனாலும் கொடுப்பனவு வழங்கல் தாமதமடைந்துள்ளது - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## விஷமேற விடலாமோ?

சும்மாயிருக்கும் குட்டையைக் குழப்புவதென்பது தமிழ் அரசுக் கட்சிக்கு கைவந்தகலை போலும். கொரோனாப் பேரிடருக்கு மத்தியிலும் அப்படிக் குழப்பும் கலையை அந்தக் கட்சி தொடரத்தான் செய்கின்றது. "இறுதிப்போரில் படையினரும், புலிகளும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டனர்" என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு எழுதி அனுப்பவுள்ள கடிதத்தில் குறிப்பிட்டதன் மூலமே, புதிய குழப்பத்துக்கு தமிழ் அரசுக் கட்சி அடிபோட்டுள்ளது.

ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவை மாநாட்டுக்கான ஆயத்தங்களில் அரசு ஒரு புறமும், தமிழர் தரப்பு மறுபுறமும் இறங்கியுள்ளன. இதன் ஒருகட்டமாக, தமிழ்த்தேசியக் கட்சிகள் யாவும் இணைந்து, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு கடிதமொன்று அனுப்புவதென முடிவெடுக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்தக் கடித விவகாரத்திலும் சில தரப்புகள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டி அரசியல்செய்ய முற்பட்டன. இதனால் இப்போது தமிழ்த் தேசியக் கட்சிகள் தனியாகவும், தமிழ் அரசுக் கட்சி தனியாகவும் வெவ்வேறு கடிதங்களை அனுப்பவுள்ளன. அதில் தமிழ் அரசுக் கட்சியின் கடிதத்தில் , ஐ.நா.வின் முன்னாள் பொதுச் செயலர் பான் கீ மூனின் அறிக்கையில் இடம்பெற்றுள்ள விடயங்கள் மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ளன. அந்த மேற்கோள்களில் ஒன்றே, " இறுதிப் போரில் படையினரும், புலிகளும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டனர்" என்பது.

பான் கீ மூனின் அறிக்கையை , ஆதாரமாக மேற்கோள் காட்டியதே மிகப்பெரிய தவறு. போர் முடிந்த கையோடு பான் கீ மூன் இலங்கைக்கு வந்திருந்தார். வந்தவர் பாதிக்கப்பட்ட மக்களை நலன்புரி நிலையங்களுக்கு சென்று நேரில் சந்திக்கக் கூட இல்லை. ஹெலியில் பறந்து சென்று பார்த்துவிட்டுப் போய்விட்டார். அப்படிப்பட்டவரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை எப்படி இருக்குமென்பது சிறுபிள்ளைக்குக் கூடத் தெரிந்திருக்கும்.

படையினர் போர்க்குற்றங்களில் ஈடுபடும் காணொலிகள், ஒளிப்படங்கள், பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியங்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் வாக்குமூலங்கள் என்பனவெல்லாம் அசைக்கமுடியாத ஆதாரங்களாக இருந்தும் கூட, "படையினர் போர்க்குற்றங்களில் ஈடுபடவேயில்லை" என்றுதான் ஆட்சியாளர்களும், பெரும்பான்மையான சிங்களக் கட்சிகளும், சிங்கள ஊடகங்களும் உடும்புப் பிடியாக நிற்கின்றன. ஆனால், தமிழர்களின் அரசியல் ஏகப்பிரதிநிதி என்று சொல்லிக் கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான தமிழ் அரசுக் கட்சியோ, 'புலிகளும் போர்க்குற்றம் செய்தார்கள்" என வலிந்து , அரசாங்கத்துக்குச் சார்பான ஒப்புதலை வழங்குவதன் மர்மம் தான் என்னவென்று புரியவில்லை.

ஒரு காலத்தில் தமிழ் மக்களின் அரசியல் ரீதியான போராட்டங்களின் அச்சாணியாக இருந்த தமிழ் அரசுக் கட்சி , இன்று அதே தமிழ் மக்களுக்கு பாதகமான பின்விளைவுகளை உண்டுபண்ணும் நடவடிக்கையில் இறங்குவதற்கு ஒரேயொரு தனிநபரே காரணம். ஒருகுடம் பாலுக்கு ஒரு துளி விஷம் என்பர். அந்தத் தனிநபரால், ஒட்டுமொத்த தமிழ் அரசுக் கட்சியும் விஷமேறிக் கிடப்பது போன்ற விம்பம் மக்கள் மத்தியிலும் உருவாக்கத் தொடங்கிவிட்டது. அதேவேளை, தமிழ்த் தேசியக் கட்சிகள் மக்களுக்காக ஒன்றித்து, ஒரே அணியாகக் குரல் கொடுப்பதையும் கெடுப்பதும் அந்தத் தனிநபரே. விஷத்தைக் களையாவிட்டால் , மக்களுக்கு மட்டுமல்ல, பாலுக்கும் (தமிழ் அரசுக் கட்சிக்கும்) கெடுதியே.




# கையிருப்பில் 4 மாதங்களுக்கு போதுமான சீனி உள்ளது

**கொழும்பு, செப். 6**

**நான்கு மாதங்களுக்குத் தேவையான சீனி கையிருப்பில் உள்ளது. எனவே, சீனிக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என எவரும் வீண் அச்சம் கொள்ளவேண்டியதில்லை என்று இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர நேற்று தெரிவித்தார்.**



நாட்டில் சீனிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், பஞ்சம் ஏற்பட்ட காலத்தைப்போன்று சீனி வாங்கவும் மக்களுக்கு வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என எதிர்க்கட்சிகளால் முன்வைக்கப்படும் கருத்துக்கு பதிலடி கொடுக்கும் விதத்திலேயே இராஜாங்க அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு.

நாட்டில் எவ்வித தட்டுப்பாடுமின்றி தொடர்ச்சியாக நான்கு மாதங்களுக்கு வழங்கக்கூடிய அளவுக்கு சீனி கையிருப்பில் உள்ளது. எதிரணிகள் கூறுவதுபோல தட்டுப்பாடு ஏற்படவில்லை. மக்களுக்கு தட்டுப்பாடின்றி சீனியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, இது விடயத்தில் எவரும் வீண் அச்சம் கொள்ளவேண்டியதில்லை - என்றார்.

அதேவேளை, சீனி மாபியாக்களை இந்த அரசே பாதுகாக்கின்றது. வரி விலக்கை வழங்கிவிட்டு, இன்று ஊடக கண்காட்சிக்காக சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஒ-44)

# மாத இறுதிக்குள் ஒரு லட்சம் ஸ்புட்னிக் வி தடுப்பூசிகள்

கொழும்பு, செப். 6

இந்த மாதத்துக்குள் மேலும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ஸ்புட்னிக் வி தடுப்பூசிகள் இலங்கைக்கு வழங்கப்படும் என ரஷ்ய நிறுவனம் உறுதியளித்துள்ளது என்று மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பான இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன நேற்றுத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

சீனாவிடமிருந்து மேலும் 40 லட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் இன்று (நேற்று) கிடைக்கப்பெற்றன. இதன்படி இதுவரையில் 22 பில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகள் கிடைத்துள்ளன. ஒரு கோடி பேருக்கு சினோபார்ம் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன. இதில் 73 லட்சம் பேருக்கு 2 அலகு தடுப்பூசிகளும் ஏற்றப்பட்டுள்ளன.

அத்துடன், கண்டி மாவட்டத்தில் ஒன்றரை லட்சம் பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இவர்களில் 30 ஆயிரம் பேருக்கு இரண்டாவது டோஸும் வழங்கப்பட்டுள்ளது.

எஞ்சிய தொகை எப்போது வழங்கப்படும் என ரஷ்ய நிறுவனத்திடம் கேட்டோம். இந்த மாதத்துக்குள் ஒரு லட்சத்து 20 ஆயிரம் தடுப்பூசிகள் வழங்கப்படும் எனத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது- என்றார். (ஒ-44)

# அதிஉயர் சபை இன்று கூடுகிறது 'அவசர நிலை' குறித்து விவாதம்

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடவுள்ளது.

ஆரம்பக்கட்ட சபை நடவடிக்கைகள் நிறைவுபெற்ற பின்னர், அவசரகால சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பான விவாதம் ஆரம்பமாகும். பிற்பகல் 4.30 மணிவரை விவாதம் தொடரும் என சபாநாயகர் அலுவலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றையதினம் நாடாளுமன்றத்தில் இடம்பெறவிருந்த வாய்மூல விடைக்கான கேள்விகளை மற்றுமொரு தினத்துக்கு ஒத்திவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் நாடாளுமன்ற வளாகத்தில் விசேட கொரோனாப் பரிசோதனையும் மேற்கொள்ளப்படவுள்ளது.

கொரோனா நிலைமையால் இன்றும், நாளையும் மட்டுமே சபை கூடுகின்றது. (ஒ,44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனடோலின் விலையும் சடுதியாக அதிகரிப்பு

## இலாபம் தேடும் வர்த்தகர்கள்

**யாழ்ப்பாணம், செப்.6**

**உணவுப்பொருள்களின் விலை நாளாந்தம் அதிகரித்து வரும் நிலையில், மருந்துப் பொருள்களின் விலையும் சடுதியாக அதிகரித்துள்ளது. குறிப்பாக பனடோலின் விலை இருமடங்காக அதிகரித்துள்ளது.**




கொரோனாத் தொற்றால் வாழ்வாதாரத்தை இழந்துள்ள மக்கள், முடக்க காலத்தில் மருத்துவமனைகளுக்கு செல்வதைத் தவிர்த்து மருந்துக்கடைகளில் குறிப்பிட்ட மாத்திரைகளைக் கொள்வனவு செய்து வருகின்றனர்.

குறிப்பாக அனைத்து நோய்களுக்கும் உடன் நிவாரணியாக பனடோலைப் பயன்படுத்தி வருகின்றனர்.

ஆனால் நியாய விலையை விட இரண்டு மடங்கு விலைக்கு பனடோல் விற்பனை செய்யப்படுகின்றது.

தற்போதைய நிலையில் தொடர்புடைய அதிகாரிகள் இதனைக் கண்காணிக்கத் தவறியுள்ளதால், வர்த்தகர்கள் கொள்ளை இலாபத்தைச் சம்பாதித்து வருகின்றனர்.

இதனால் வாழ்வாதாரத்தை இழந்துள்ள மக்கள் பெரும் வேதனையடைந்துள்ளனர்.

எனவே மருந்துப் பொருள்களை நியாய விலையில் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4)



# வவுனியாவில் கசக்கும் பழங்களின் விலைகள்

## நுகர்வோர் விசனம்

வவுனியா,செப்.6

பொதுமுடக்கம் காரணமாக மக்கள் வருமானம் இழந்துள்ள நிலையில், வவுனியாவில் அதிக விலைக்கு பழங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இதனைக் கட்டுப்படுத்த பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை நடவடிக்கை எடுக்கவில்லை என்று நுகர்வோர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வவுனியா குருமன்காடு, மன்னார் வீதி, ரயில் நிலைய வீதி போன்ற இடங்களில் நடமாடும் வாகனங்களில் பழங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

குறிப்பாக 5 சிறிய தோடம்பழங்கள் 300 ரூபாவுக்கும், பெரிய தோடம்பழம் ஒன்று 150 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது. ஏனைய பழங்களும் அதிக விலைக்கே விற்பனை செய்யப்படுகின்றன.

கொரோனாத் தொற்றுச் சூழலில் மக்கள் பழங்களை அதிகம் கொள்வனவு செய்து வருவதால், இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி சில வியாபாரிகள், அதிக விலைக்கு பழங்களை விற்பனை செய்து வருகின்றனர்.

இது தொடர்பில் வவுனியா பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு தெரியப்படுத்திய போதும், தமக்குச் சில இலக்குகள் தரப்பட்டுள்ளன. தற்போது அவற்றைச் செய்து வருகின்றோம். இதனை உடனடியாகப் பார்க்கமுடியாது என்று பதிலளித்தனர். (ஒ-4-18)

# கூட்டுறவுச் சங்கங்களில் நிர்ணய விலைக்கு சீனி

கிளிநொச்சி,செப்.6



வடக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக நிர்ணய விலைக்கு சீனி விநியோகிக்கப்படுகின்றது. அதனடிப்படையில் ஒரு கிலோ சீனி 125 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

எனவே மக்கள் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்து, கூட்டுறவுச் சங்கங்களில் சீனியைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனாத் தொற்று நாளாந்தம் அதிகரித்து வரும் நிலையில், அத்தியாவசியப் பொருள்களின் விலையும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. அரசால் நிர்ணயவிலை அறிவிக்கப்பட்டபோதும் மக்கள் குறிப்பிட்ட விலைக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியாது திண்டாடுகின்றனர்.

கடந்த மாதம் சீனியின் விலை அதிகரிக்கப்பட்டது. அதனால் பதுக்கல்களும் அதிகரித்தன.


எனினும் நுகர்வோர் அதிகார சபையின் நடவடிக்கைகளால் பதுக்கல் நடவடிக்கைகள் முறியடிக்கப்பட்டன.

அவ்வாறு கைப்பற்றப்பட்ட சீனியை சதொச மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக நிர்ணய விலையில் மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் சதொச நிலையங்கள் இல்லாத பிரதேச மக்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக குறைந்த விலையில் சீனியைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஒ-4-113)

# வவுனியா மாவட்டத்தில் நாளை முதல் தடுப்பூசி?

வவுனியா,செப்.6



வவுனியா மாவட்டத்தில் நாளை செவ்வாய்க் கிழமை முதல் கொரோனாத் தடுப்பூசி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தடுப்பூசிகள் மாவட்டத்துக்குக் கிடைக்கும் நாள் உறுதி செய்யப்பட்டதும், எந்தெந்த இடங்களில், எப்போது தடுப்பூசி செலுத்தப்படும் என்ற விவரம் மக்களுக்கு அறிவிக்கப்படும். அநேகமாக நாளை முதல் தடுப்பூசிகள் வழங்கும் பணியை ஆரம்பிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காட்டுக்குள் கசிப்பு உற்பத்தி பொலிஸார் திடீர் முற்றுகை

வவுனியா,செப்.6

வவுனியா உலுக்குளம் காட்டுக்குள் செயற்பட்ட கசிப்பு உற்பத்தி நிலையம் நேற்று முன்தினம் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, செட்டிகுளம் பகுதி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் செனவிரட்ன வீரக்கோன் தலைமையில், உலுக்குளம் பொலிஸார் திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது காட்டுக்குள் கசிப்புத் தயாரிப்பதற்குப் பயன்படும் நான்கு பெரல்கள், 100 லீற்றர் கோடா மற்றும் வயர்கள் என்பன மீட்கப்பட்டன. சந்தேநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று உலுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-4-18)

# 84 பயனாளிகளுக்கு புதிதாக வீடுகள்

கிளிநொச்சி,செப்.6

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில், இந்த வருடத்தில் மட்டும் 84 பயனாளிகள் புதிய வீட்டுத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைவாக 6 லட்சம் ரூபா பெறுமதியான வீடுகள் 47 பயனாளிகளுக்கும், 10 லட்சம் ரூபா பெறுமதியான வீடுகள் 37 பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

வேம்பொடுகேணி மற்றும் முகமாலை கிராமங்களில் அதிகளவான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை முன்னைய அரசால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களுக்குரிய நிதி முழுமையாக வழங்கப்படாத காரணத்தால், வீடுகள் அரைகுறைக் கட்டுமானத்துடன் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4-6)

அதேவேளை தொற்றாளர்களை இனம் கண்டு அவர்களுக்கு சிகிச்சையளித்து, தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனினும் மக்கள் அசமந்தப்போக்கோடு செயற்படுவதால் மாவட்டத்தில் தொற்றைக் கட்டுப்படுத்துவதில் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன என்று சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (ஒ-4-110)

# தனிமைப்படுத்தப்பட்டவர்கள் கடும் உணவு நெருக்கடிக்குள்

## அதிகாரிகள் அசமந்தம்

**கிளிநொச்சி,செப்.6**

**கொரோனாத் தொற்றுக் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு, உரிய காலத்தில் உணவுப் பொருள்கள் வழங்கப்படவில்லை. அதனால் பல குடும்பங்கள் கடும் உணவு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.**

மாவட்டத்தில் சிறுவர்கள், முதியவர்கள், மகப்பேற்றுக்குரிய பெண்களைக் கொண்ட குடும்பங்களே அதிகமாகத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் நாளாந்தம் உழைத்து தமது உணவுத் தேவைகளை நிறைவேற்றிவந்தனர். தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளதால் உணவு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

எனவே கிளிநொச்சி மாவட்டச் செயலர், பிரதேச செயலர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உணவுப் பொருள்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவிக்கையில்,

திறைசேரியில் இருந்து நிதி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டது. அதனால் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்படவில்லை. தற்போது திறைசேரியில் இருந்து நிதி கிடைத்துள்ளது. எனவே தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு உணவு விநியோகம் விரைவாக மேற்கொள்ளப்படும் - என்றார். (ஓ-4-13)

# தடுப்பூசி செலுத்தலில் இலங்கை முன்னேற்றம்

## கென்யா பாராட்டு

கொழும்பு, செப். 6

இலங்கையில் 70 வீதமான மக்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இது ஏனைய நாடுகளுக்கும் எடுத்துக்காட்டானது என்று கென்ய ஜனாதிபதி உஹுரு முயிகயி கென்யாட்டா தெரிவித்தார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, கென்யா ஜனாதிபதி உஹுரு முயிகயி கென்யாட்டா ஆகியோருக்கிடையிலான தொலைபேசி ஊடான கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இது தொடர்பான ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு தொடர்பில் இருவரும் அவதானம் செலுத்தினர். இலங்கையில் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தி சிறப்பாக முகாமைத்துவம் செய்யக் கிடைத்தபோதிலும், புதிய வைரஸ் திரிபுகள் உருவாகியுள்ளமை தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய எடுத்துரைத்தார்.

வரலாற்றின் தொடக்கத்திலிருந்தே பல்வேறு சவால்களை எதிர்கொள்ளும் திறன் இலங்கைக்கு உள்ளதென்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவ்வாறே இந்தத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தவும் முடியும் என்று தெரிவித்தார்.

கென்யா இலங்கையுடன் சிறந்த நட்புறவைப் பேணும் நாடாகும். இரு நாடுகளுக்கும் இடையிலான தூதரகத் தொடர்புகளின் 50 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன. பொருளாதாரம், வர்த்தகம், முதலீடு மற்றும் அரசியல் ரீதியிலான தொடர்புகள் இரு தரப்புகளுக்கும் இடையில் புதிய உயர் நிலையை எட்டியுள்ளன. -என்றுள்ளது. (ஓ-4)

# இணையவழி அரங்க கதையாடல்

யாழ்ப்பாணம்,செப்.6

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல் நிகழ்வு எதிர்வரும் நான்கு நாள்கள் இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை பேராசிரியர் சி.மௌனகுரு நாடகமும், ஆற்றுகையும் என்ற தலைப்பிலும், நாளை மறுதினம் புதன்கிழமை தஞ்சாவூர் உதிரி நாடக நிலம் நாடகச் செயற்பாட்டாளர் விஜயகுமார், கல்வி நிலையில் நவீன நாடகத்தின் பங்கு எனும் தலைப்பிலும், மறுநாள் வியாழக்கிழமை அவைக்காற்றுக் கலைக்கழகம் க.பாலேந்திரா மற்றும் ஆனந்தராணி பாலேந்திரா ஆகியோர் கண்ணாடி வார்ப்புக்கள் நாடக அனுபவம் எனும் தலைப்பிலும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பேராசிரியர் பால. சுகுமார் ஈழநாட்டியம் எனும் தலைப்பிலும் கதையாடவுள்ளனர்.

ஏற்புரையை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி. அருள்குமரன் நிகழ்த்துவார்.

நிகழ்வில் ஆர்வமுடையவர்கள் சூம் செயலி இலக்கம் 647334 8261கடவுச்சொல் ITM ஊடாக இணைந்துகொள்ள முடியும் என்று புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ஓ-4)

# நடமாடும் வியாபாரத்துக்கு பச்சிலைப்பள்ளியில் தடை

கிளிநொச்சி,செப்.6

பச்சிலைப்பள்ளி பிரதேச எல்லைக்கு உட்பட்டவர்களைத் தவிர்த்து, வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள், எமது எல்லைக்குள் நடமாடும் வியாபாரத்தில் ஈடுபட முடியாது என்று பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சு.சுரேன் அறிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது பொது முடக்கம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிரித்துள்ளது. இதனால் வெளியிடங்களில் இருந்து எமது பகுதிக்குள் நுழைபவர்களுக்கு அனுமதி வழங்கமுடியாது. எமது பகுதியில் வசிப்பவர்களும் சுகாதாரத் துறையின் அறிவுறுத்தலுக்கு அமையவே வியாபாரத்தில் ஈடுபடமுடியும். பொதுஇடங்கள் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் தொற்று நீக்கல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எனவே எமது பிரதேசத்தில் தொற்றைக் கட்டுக்குள் கொண்டுவர மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஓ-4-6)

# வவுனியாவில் மேலும் 116 பேருக்கு தொற்று

வவுனியா,செப்.6

வவுனியா மாவட்டத்தில் மேலும் 116 பேருக்கு நேற்றுமுன்தினம் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இனங்காணப்பட்ட தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள், மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டோர், எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனைகளில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தொற்றாளர்களை சிகிச்சை நிலையங்களில் சேர்ப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஓ-4-18)



# பூநகரியில் குருதித்தானம்

கிளிநொச்சி,செப்.6

பூநகரி பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் குருதித்தான நிகழ்வு பிரதேச மருத்துவமனையில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்குடன், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அனுசரணையுடன் குருதித்தான நிகழ்வு இடம்பெற்றது.

இதில் மாவட்ட குருதி வங்கியின் மருத்துவர், பூநகரி பிரதேச மருத்துவமனையின் மருத்துவர், மாவட்ட சம்மேளனத் தலைவர், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் குருதித்தானம் வழங்கியவர்களுக்கு பயன்தரும் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (ஓ-4-6)

# தேவையற்ற நடமாட்டங்களை இயலுமானவரை தவிருங்கள்

## யாழ்.மாவட்டச் செயலர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.6

கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில், மக்கள் தேவையற்ற நடமாட்டங்களைத் தவிர்த்து, இயலுமானவரை தத்தமது வீடுகளில் தங்கியிருப்பது அவசியம் என்று யாழ்.மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 14 ஆயிரத்தை நெருங்குகின்றது. மாவட்டத்தில் தொடர்ச்சியாக 200க்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் சராசரியாக இனங்காணப்பட்டு வருகின்றனர். இந்த எண்ணிக்கை மேலும் உயர்வடைய வாய்ப்புண்டு.

எனவே மக்கள் தொடர்ச்சியாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

தற்போது தனிமைப்படுத்தல் ஊரடங்குச்சட்டம் நடைமுறையில் உள்ள நிலையில், பெரும்பாலான பகுதிகளில் மக்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

எனவே சுகாதாரத் துறையினருக்கு ஒத்துழைப்பு வழங்கி, கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த அனைவரும் முன்வர வேண்டும் - என்றார். (ஓ-4-159)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய அமைப்புக்களை நிபந்தனையின்றி தடை செய்க

## பொதுபல சேனா மீண்டும் போர்கொடி

**கொழும்பு,செப்.6**

**இஸ்லாமிய அடிப்படைவாதக் கொள்கையுடன் தொடர்புடைய அனைத்து அமைப்புக்களையும், நிபந்தனைகளின்றி தடை செய்ய வேண்டும் என்று பொதுபல சேனா அமைப்பு வலியுறுத்தியுள்ளது.**

நியூஸிலாந்தில் மட்டக்களப்பு காத்தான்குடியைச் சேர்ந்த நபர் ஒருவர் பல்பொருள் அங்காடி ஒன்றில் மேற்கொண்ட கத்திக்குத்துத் தாக்குதல் தொடர்பில், கட்சியின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவிக்கையில்,

இந்தத் தாக்குதல் தொடர்பில் இலங்கை அதிகளவில் அவதானம் செலுத்த வேண்டும். இஸ்லாமிய அடிப்படைவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடையோர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்யுமாறு தேசிய மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் அழுத்தம் பிரயோகிக்கின்ற நிலையில், அதனை அரசு ஒரு போதும் கருத்தில் கொள்ளக் கூடாது. குறித்த தாக்குதல்தாரி இரண்டு பேஸ்புக் பக்கங்கள் ஊடாக இஸ்லாம் மத தீவிரவாதத்தை வளர்ப்பதற்கான கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இருப்பினும் மனித உரிமைக் காரணிகளையும், ஏனைய பொதுக் காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டு அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

எனினும் அவரை நியூஸிலாந்து பாதுகாப்புத் தரப்பினர் இரகசியமாகக் கண்காணித்துள்ளனர். என்றார். (ஓ.4)

# காத்தான்குடியில் தீவிர விசாரணை

கொழும்பு.செப்.6

நியூஸிலாந்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த காத்தான்குடியைச் சேர்ந்த நபரின் குடும்பத்தாரிடம் விசாரணைகளை மேற்கொள்வதற்காக, புலனாய்வுப் பிரிவினர் அங்கு பயணித்துள்ளனர்.

முப்படையினருடன் இணைந்து புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடியில் பிறந்து 2011ஆம் ஆண்டு நியூஸிலாந்து சென்ற குறித்த இளைஞன், அங்கு ஐ.எஸ். தீவிரவாத அமைப்புடன் தொடர்பில் இருந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த இளைஞனின் சொந்த இடமான காத்தான்குடியில் அவருடைய இல்லத்தில் அவரின் தாயாரிடம் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவரது தந்தை மற்றும் சகோதரர்கள் வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில், தாயார் மட்டும் காத்தான்குடியில் வசித்து வருகின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஓ.4)

# வாகனங்களின் விலை சடுதியாக அதிகரிப்பு

## பின்னணியில் மோசடி

கொழும்பு, செப்.6

இலங்கையில் வாகனங்களின் விலை சடுதியாக அதிகரித்து வரும் நிலையில், அதற்குப் பின்னால் மோசடியாளர்களைக் கொண்ட மாஃபியா ஒன்று உருவாகியுள்ளதாக வாகன விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர். தற்போது வாகனங்களின் விலை அதிகரிப்பு செயற்கையானது. இதற்குப் பின்னால் ஒரு வகையான மாஃபியா குழு செயற்படுகின்றது. சாதாரண வாகனங்களின் விலையிலும் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இதுபோன்ற நியாயமற்ற விலையில் வாகனங்களை வாங்கவேண்டாம். மிகக்குறைந்த விலையில் கொண்டு வரப்பட்ட வாகனங்களை மறைத்து வைத்து, எதிர்காலத்தில் அதிக விலைக்கு விற்பனை செய்யத் திட்டமிட்டு இந்த மாஃபியா குழு செயற்படுகின்றது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம-4)

# மருத்துவமனைகளில் தேங்கும் சடலங்கள்

## உடன் அகற்றுமாறு பணிப்பு

கொழும்பு, செப்.5

சில மருத்துவமனைகளில் தேங்கிக்கிடக்கும் அடையாளம் தெரியாத சடலங்களை உடனடியாக அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நீதித்துறை மற்றும் பல்வேறு காரணங்களால் சில மருத்துவமனைகளில் சடலங்கள் தேக்கமடைந்துள்ளன. அதற்கமைவாக நீண்ட நாள்களாக தேங்கிக்கிடந்த பல உடல்கள் சில நாள்களுக்கு முன்பு மருத்துவமனைகளில் இருந்து அகற்றப்பட்டன. மீதமுள்ள உடல்களை விரைவில் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கிடையில் சில மருத்துவமனைகளில் பாழடைந்த பிரேத அறைகள் மற்றும் குளிர்பதன கிடங்குகளை விரைவாகச் சரி செய்யுமாறு சுகாதார அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். அதற்கமைவாக மருத்துவமனைகளில் தேவையற்ற உடல்கள் தேங்குவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம -4)

# விஞ்ஞானபூர்வமான முடக்கமே வேண்டும்!

## எதிர்க்கட்சி மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, செப். 6

இனிவரும் காலப்பகுதியிலாவது நாட்டை விஞ்ஞானபூர்வமாக முடக்கி, மக்களைப் பாதுகாப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவிக்கையில்,

நாட்டில் அரசால் அறிவிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் மேலும் ஒரு வாரத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை நாடு முறையாக முடக்கப்படவில்லை. இதனால் உரிய பயன் கிடைக்காத சூழ்நிலையே காணப்படுகின்றது.

எனவேதான் நாட்டை விஞ்ஞானபூர்வமாக முடக்குமாறு வலியுறுத்தி வருகின்றோம். அப்போதுதான் மக்களின் உயிரைப் பாதுகாக்க முடியும். தொற்றாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும். இனிவரும் நாள்களிலாவது அதனைச் செய்யுமாறு அரசை வலியுறுத்துகின்றோம். மூன்றிலிரண்டு பலத்தைக் கேட்டனர். மக்கள் அதனை வழங்கினர். அதன்பின்னர் '20' வேண்டும் என்றனர். அதுவும் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது. முடியாத கட்டத்தில் பஸில் வேண்டும் என்றனர். பஸிலும் நாடாளுமன்றம் வந்தார். அமைச்சரானார். ஆனால் இன்று என்ன நடக்கின்றது? அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தும் நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது. -என்றார். (ம-4-44)

# நெருக்கடிக்குள் இலங்கையர்கள்

## முன்னாள் சபாநாயகர் சுட்டிக்காட்டு



கொழும்பு. செப்.6

பெரும் நெருக்கடிக்குள் இலங்கையர்கள் சிக்கியுள்ளனர் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும், முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

மக்கள் பெரும் நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வேளையில், அவர்களின் சுதந்திரத்தை அரசு பறிக்கின்றது.

அத்தியாவசிய உணவுப்பொருள்களை செயற்றிறனான வகையில் பகிர்ந்தளிப்பதில் அரசு தோல்வியடையும் வேளையில், அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# புராதனச் சின்னங்களைப் பாதுகாக்க இலங்கைக்கு அமெரிக்கா நிதியுதவி

கொழும்பு. செப். 6

புராதன கண்டிய மன்னர் அரண்மனை மற்றும் தொல்பொருள் அருங்காட்சியகம் ஆகியவற்றை அபிவிருத்திசெய்து பாதுகாப்பதற்காக, அமெரிக்கா 520 லட்சம் ரூபாவை இலங்கைக்கு வழங்கியுள்ளது என்று அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

கண்டி நகரில் சமய, கலாசார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றிடங்களைப் பாதுகாப்பதன் மூலம் சுற்றுலாத்துறை மற்றும் பொருளாதாரத் துறையை அபிவிருத்தி செய்யமுடியும்.



குறிப்பாக 17ஆம் நூற்றாண்டு முதல் கண்டி சிறி தலதா மாளிகை வளாகத்தில் அமையப்பெற்ற புராதன கண்டிய மன்னர் அரண்மனை மற்றும் தொல்பொருள் அருங்காட்சியகம் ஆகியவற்றைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக கலாசார பாதுகாப்புக்காக அமெரிக்கத் தூதுவரின் நிதியம் ஊடாக நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது என்று தூதரகம் குறிப்பிட்டுள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு முழுவதும் சுற்றிவளைப்பு பல போதைப்பொருள்கள் மீட்பு

## எழுவர் கைது

**கொழும்பு,செப்.6**

**நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் பல லட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டதோடு, சந்தேக நபர்கள் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.**



அதற்கமைவாக பொரளை காதர் னான தோட்டத்தில் 50 கிராம் 240 மில்லிக் கிராம் ஹெரோய்னுடன் 29 வயது நபர்,

இங்கிரிய ஹந்தபன்கொடப் பிரதேசத்தில் 17 கிராம் 61 மில்லிக் கிராம் ஹெரோய்னுடன் 33 வயது நபர்,

கிராண்ட்பாஸ் 75 ஆம் தோட்டத்தில் 13 கிராம் 450 மில்லிக்கிராம் ஹெரோய்னுடன் 32 வயது நபர், மாளிகாவத்தை போதி ராஜ மாவத்தையில் 5 கிராம் 270 மில்லிக் கிராம் ஹெரோய்னுடன் 33 வயது நபர், கிராண்ட்பாஸ் சாந்தம்ம தோட்டத்தில் 5 கிராம் 902 மில்லிக்கிராம் ஹெரோய்னுடன் 35 வயது நபர்,

மினுவாங்கொடை மடித்தகமப் பிரதேசத்தில் 5 கிராம் 140 மில்லிக் கிராம் ஹெரோய்னுடன் 23 வயது நபர் மற்றும் கந்தான பால சூரிய மாவத்தைப் பிரதேசத்தில் சட்ட விரோத மதுபான தயாரிப்புக்காக பயன்படுத்துவதற்குத் தயார் நிலையிலிருந்த ஆயிரத்து 80 லீற்றர் கோடாவுடன் 42 வயது நபர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஒ.4,22)

# ரஷ்யா - இலங்கைக்கு நேரடி விமான சேவை

கொழும்பு,செப்.6

இலங்கைக்கான நேரடி விமான சேவையை ரஷ்யாவின் ஏரோப்ளொட் (Aeroflot) என்ற விமான நிறுவனம் ஆரம்பிக்கவுள்ளது.

அதற்கமைவாக எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி முதல் இலங்கைக்கான நேரடி விமான சேவை இடம்பெறவுள்ளது.

ரஷ்யாவின் ஏரோப்ளொட் விமான நிறுவனத்தினருக்கும், இலங்கையின் விமான நிலைய மற்றும் விமான நிறுவனங்களின் அதிகாரிகளுக்கும் இடம்பெற்ற சந்திப்பில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ஒ.4)

# திருமணம் செய்வதாகக் கூறி 5 பெண்களிடம் பணமோசடி

## முன்னாள் சிப்பாய் சிக்கினார்

கொழும்பு,செப்.6

திருமணம் செய்வேன் என்று நம்ப வைத்து பெண்கள் சிலரிடம் பண மோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர், கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகளின் பட்டியலில் உள்ளவர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஊடகங்களில் வெளிவரும் திருமணம் தொடர்பிலான விளம்பரங்களைப் பயன்படுத்தி, பெண்கள் சிலருடன் தொடர்புகளை ஏற்படுத்தி, சந்தேகநபர் பண மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

சந்தேகநபர் உயர் பதவியில் உள்ளதாகவும், தாயாருக்கு புற்று நோய் என்று கூறியும் பெண்கள் சிலரிடம் கைமாற்றுக்குப் பணம் பெற்றுள்ளார் என்பது விசாரணை களில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரால் பாதிக்கப்பட்ட 5 பெண்கள் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைவாக விசாரணைகளை ஆரம்பித்த அதிகாரிகள், 2 வருடங்களின் பின்னர் சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர். (ஒ.4)

# நிர்வாகத்துக்குள் இராணுவ நியமனம் சர்வாதிகார ஆட்சிக்கே வழிவகுக்கும்



யாழ்ப்பாணம், செப். 6

சகல துறைகளிலும் குறிப்பாக நிர்வாகத் துறையில் பொறுப்பு வாய்ந்த பதவிகளில் இராணுவ அதிகாரிகளை நியமிப்பது சர்வாதிகார இராணுவ ஆட்சிக்கே வழி வகுக்கும்.

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

அவருடைய இல்லத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது அவசரகால நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நாடு சர்வாதிகார ஆட்சியை நோக்கிச் செல்லுமென்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. நாடாளுமன்றக் கட்சித் தலைவர்களையும் மருத்துவ நிபுணர்களையும் சேர்த்து ஒரு தேசிய அமைப்பை உருவாக்கி திட்டங்களை வகுக்க அரசு தவறிவிட்டது.

கொரோனாத் தொற்றின் திரிபுகள் தீவிரமடைந்து வருகின்றமையால், மக்கள் அவதானத்துடன் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயற்படவேண்டும்.

கொரோனா வைரஸ்போல விலைவாசியும் எகிறியுள்ளது. உழைப்பின்மை, வறுமை, பசி, பட்டினி காரணமாக மக்களுக்கு ஊட்டச்சத்துக்களை வழங்குவதற்கான திட்டங்களை அரசு உருவாக்கவேண்டும்.

அத்தியாவசியப் பொருள்களை பெற்றுக்கொள்வதற்காக பொதுமக்கள் வியாபார நிலையங்களின் முன்பாக நீண்டவரிசையில் காத்திருக்கின்றனர், பொருள்களுக்காக அலைந்து திரிகின்ற நிலை ஏற்பட்டுள்ளது - என்றார். (த-26)

# நீதியின் வழியில் கோத்தாபய அரசு

## பெரமுன பெருமிதம்

கொழும்பு,செப்.6

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு, எவரையும் பழிவாங்கும் வகையில் செயற்படாது. அத்துடன் குற்றவாளிகளையும் தப்பவிடாது. நீதியின் வழியிலேயே செயற்படும்.

இவ்வாறு சிறிலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த அரசில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. எமது அரசு நீதிமன்றை முகாமை செய்வதோ அல்லது அதிகாரத்தைக் கொண்டு விரும்பியவர்களைக் கைது செய்து சிறையில் அடைப்பதோ அல்ல.

நீதிமன்றால் தண்டனை வழங்கப்படுவதற்கு மாறாக வெளியில் தண்டனை வழங்கும் பொறுப்பு எமது அரசினுடைய பொறுப்பு அல்ல. எமது அரசு சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை.

மத்திய வங்கிக் கொள்ளை மற்றும் உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத்தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் நீதிமன்றின் முன்னிலையில் குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்படும் பட்சத்தில், அவர்களுக்கு வழங்கப்படும் தண்டனையை இந்த அரசு நிறுத்தப்போவதில்லை - என்றார். (ஒ.4,22)

# 'காட்போட்' சவப்பெட்டிக்கு பல நாடுகளில் கிராக்கியாம்

கொழும்பு, ஒக்.6

கல்கிசை மொறட்டுவ மாநகர சபை அறிமுகப்படுத்திய 'காட்போட்' சவப் பெட்டிகளுக்கு வியட்நாமில் இருந்தும் கோரிக்கை வந்துள்ளது என்று நகராட்சி தவிசாளர் பிரியந்த சஹபந்து தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

தாய்லாந்தில் இருந்து ஆயிரம் பெட்டிகள் கோரப்பட்டுள்ளன. எதிர்வரும் திங்கட்கிழமை அவை தாய்லாந்துக்கு ஏற்றுமதி செய்யப்படும். கொரோனாத் தொற்றால் உடல்களை அடக்கம் செய்ய வடிவமைக்கப்பட்ட இந்தக் காட்போட் சவப்பெட்டிக்கு தற்போது இலங்கையில் பெரும்தேவை உள்ளது.

மரப்பெட்டியின் அதிக விலை மற்றும் மரப்பெட்டிகளின் செயலாக்கத்தால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு காரணமாக இந்த காட்போட் சவப்பெட்டிக்கு அதிகளவில் கேள்வி அதிகரித்துள்ளது - என்றார். (எ-இ)

# வளர்ப்பு நாய்கள் திடீரென உயிரிழப்பு

கொழும்பு,செப்.6

நாட்டில் கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில், தென்பகுதியில் வளர்ப்பு நாய்களின் இறப்புக்கள் அதிகரித்துள்ளன.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பருந்து மற்றும் வளர்ப்பு நாய்கள் இவ்வாறு திடீரென உயிரிழக்கின்றன என்று தென்னிலங்கை ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

யோதவெவ, சந்தகிரிகம ஆகிய பிரதேசங்களில் இவ்வாறு உயிரினங்கள் உயிரிழந்துள்ளன. இதுவரை அங்கு 25 நாய்கள் உயிரிழந்துள்ளன என்று மக்கள் தெரிவித்துள்ளனர். (ஒ.4)

# ஊர்காவற்றுறை மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், செப்.6

ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனைக்கு சுமார் 81 லட்சம் ருபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கடந்த சனிக்கிழமை கையளிக்கப்பட்டன.

தீவகம் சுருவிலைச் சேர்ந்த சவரிமுத்து ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் தமது சொந்த நிதியிலிருந்து, சுருவில் சவரிமுத்து பவுண்டேசன் ஊடாக உபகரணங்களை வழங்கியுள்ளனர்.

இளவாலை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி ஜெயக்குமார் அடிகளார், சவரிமுத்து பவுண்டேசன் சார்பாக உபகரணங்களைக் கையளித்தார். (ஒ.4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## twitter

கனகாம்பரி@
வாழ்க்கையில் முன்னேற்றம் என்பது பணம் சார்ந்ததில்லை.. மனம் சார்ந்தது..

செந்திலின்_கிறுக்கல்கள்@
இரவில் கதை கேட்டு தூங்கிய கண்கள் இப்பொழுது செல்போனின் கண்களுக்கு விருந்தாகி கொண்டிருக்கின்றன..!

சிலந்தி™@
Flames போடாமல் கடக்கும் பள்ளிப் பருவம் அற்புதமான ஆச்சர்யம்...!

சப்பாணி@
அரியவகை உயிரினங்களின் பட்டியலில்..
செல் இல்லாத மனிதர்களையும் சேர்த்துக் கொள்ளலாம்

மெத்த வீட்டான்@
யூட்டியூப்ல வர்ற விளம்பரங்களை போலத்தான், வாழ்க்கையில் சில நேரங்களில் வரும் சில பிரச்சினை களை தவிர்க்கவே முடியாது!















# பா.இரஞ்சித் இயக்கத்தில் விக்ரம்

'அட்டக்கத்தி' படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானவர் பா.இரஞ்சித். அதனைத் தொடர்ந்து 'மெட்ராஸ்', ரஜினியை வைத்து 'கபாலி', 'காலா' என அடுத்தடுத்து ஹிட் படங்களைக் கொடுத்தவர். தற்போது முன்னணி இயக்குநராக உயர்ந் துள்ளார்.

இவரின் இயக்கத்தில் அண்மையில் வெளியான 'சார்பட்டா பரம்பரை' திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் பெரு வரவேற்பைப் பெற்றது. இந்த நிலையில் பா.இரஞ்சித் இயக்கத்தில் விக் ரம் நடிக்கவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. இந்தப் படத்தின் படப்பிடிப்பு எதிர்வரும் ஒக்ரோப ரில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தகவல் கள் வெளியாகியுள்ளன.

## வெற்றி மொழி

ஒரு கண்ணாடி இல்லாமல் உங்கள் சொந்த முகத்தைப் பார்ப்பது கடினமான ஒன்று.

காயம், பயம் மற்றும் விரக்தியின் வெளிப்புற வெளிப்பாடே கோபம்.

சில நேரங்களில் நீங்கள் வெற்றிபெறுகிறீர்கள். சில நேரங்களில் நீங்கள் கற்றுக்கொள்கிறீர்கள்.

# அடையாளத்தை உருவாக்கிக்கொள்!

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு தனித்துவம் உண்டு. ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் தன்னை நிலைநாட்டிக்கொள்ளவும் தன்னை முன்னிலைப்ப டுத்திக்கொள்ளவும் விரும்புகின்றனர். அதற்காக தன்னால் முடிந்தளவு குடும்பத்தினரோடும் சமூகத்தினரோடும் போராடுகின்றனர்.

நூறு பேர் குழுமியிருக்கும் கூட்டத்துக்கு நடுவிலும் தான் தனியாகத் தெரியவேண்டும் என ஆசைப்படுபவர்கள் அனேகம் பேர். அதற்காக மற்றவர்கள் மத்தியில் தனக் கான ஓர் அடையாளம் இருக்கவேண்டுமென நினைக் கின்றனர். நிறையப் பேர் செய்யும் பெரிய தவறு என்ன வென்றால், தனக்கான அடையாளத்தை வெளியில் தேடுவதேயாகும். நமக்கான அடையாளத்தை நாம் வெளியில் தேடக்கூடாது. அதை நாம்தான் உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

அடையாளம் என்று சொல்லும்போது அது நமது செயற் பாடுகள், நமது திறமைகளுக்கான அங்கீகாரமும்கூட. ஏதோ பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்று வாழ்க்கையை வீணடிக்காமல், பயனுள்ள விடயங்களில் நேரத்தை செலவிடுவது பிரயோசனமானது.

அடையாளத்தை உருவாக்கிக் கொள்ளவேண்டும் என்று கூறியவுடன், பெரிய பெரிய விடயங்களை சிரமப்பட்டு செய்யவேண்டும் என சிந்திப்பது தவறு.. சிறு துளி பெரு வெள்ளம் என்பதைப் போல சிறிய சிறிய விடயங்களை செய்வதன் மூலம் கூட எமக்கான அடையாளத்தை நிலைநாட்டிக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள்

**மேடம்:** நல்ல நண்பர்களிடம் எண் ணங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். குழந்தைகள், குடும்பத்தினரால் சிறு சிறு மகிழ்ச்சி ஏற்படும். திட்டமிட்டு செய்தவை நல்லவிதமாக நடைபெறும் நாள். பொறுமை காப்பது நல்லது.

**இடபம்:** வெளிநாட்டிலிருந்து எதிர் பார்த்த செய்தி வரும். வெளிவட்டார நட்பு விரிவடையும். கலைஞர்கள் வெற்றி பெறுவர். உழைப்பால் வென்று பாராட்டு பெற்று மகிழ்வீர்கள்.

**மிதுனம்:** எதிர்பார்த்த இடத்தில் இருந்து உதவி கிடைத்து சமாளிப்பீர்கள். புது பங்குதாரரை இப்பேதைக்குச் சேர்க்க வேண்டாம். பணியாளர்களுக்கு திருப்தி உண்டாகும். கணவருக்கு பதவி உயரும்.

**கடகம்:** திட்டமிட்ட விஷயங்கள் தடை யுடன் நடைபெறும் நாள். வருமானம் போதுமானதாக இருந்தாலும் தேவை யற்ற கவலை இருக்கும். நட்பென்று நம்பியவர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும்.

**சிம்மம்:** மாற்று மருத்துவத்தால் தாயின் உடல் நலம் சீராகும். இளைஞர்கள் புதிய விஷயத்தில் செய்த முயற்சி பயன் தரும். நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள்.

**கன்னி:** கேட்ட இடத்தில் இருந்து உத விகள் கிடைக்காமலும் சமாளிப் பீர்கள். வேற்று மொழி பேசுபவர்கள் நட்பாவார்கள். கவனம் தேவை. சிலர் மீது இருந்த அபிப்பிராயம் மாறும்.

**துலாம்:** குழந்தைகள் பல சாதனைகள் செய்து சந்தோஷப்படுத்துவார்கள். பல காலம் ஆசைப்பட்ட விஷயம் ஒன்றை நிறைவேற்றுவீர்கள். மின்சாரப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கையை இழக்காமல் இருக்க முயற்சிக்க வேண் டும். பிரபலமானவர்களின் சந்திப்பு கிட்டும்போது கவனமாகப் பேசுங்கள். புதிய யுக்திகளை கையாளுவீர்கள்.

**தனுசு:** பூர்வீக சொத்துப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். சமுதாயப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள். நன் மைகள் கூடும். பதற்றம் காரணமாக சிரமத்துக்கு உள்ளாக வேண்டாம்.

**மகரம்:** அஜாக்கிரதை இல்லாமல் செயல்படுவது நல்லது. அவசியமற்ற வர்களிடம் அநாவசியத் தகவலைப் பகிரவேண்டாம். பல காலமுயற்சி லேசான வெற்றியை நோக்கிப்போகும்.

**கும்பம்:** பணியாளர்களுக்கு உழைப் புக்கேற்ற பலன் கிடைக்கும். குடும் பத்தில் சுபநிகழ்ச்சி நடைபெறுவ தற்கான அடையாளம் தெரியும்.

**மீனம்:** உழைப்போரின் எண்ணம் ஒன்று பெருமுயற்சியால் நிறைவேறும். குடும்ப ஒற்றுமைக்கு எடுத்த முயற்சி வெற்றி பெறும். பகைவர் ஒருவர் நட்பாக வாய்ப்புண்டு. மகிழ்ச்சி அதிகரிக்கும்.

# தொற்றிலிருந்து பாதுகாத்து கொள்வோம்





மருத்துவர் வே.கமலநாதன்
*பதில் மருத்துவ அத்தியட்சகர்*
*ஆதார மருத்துவமனை*
*பருத்தித்துறை.*



எமது நாட்டில் கொரோனாத் தொற்று 2020ஆம் ஆண்டு ஆரம்பித்தது. வெவ்வேறு காலப்பகுதிகளில் தொற்று பல அலைகளாக உருவெடுத்து கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டது. ஆனால் தற்போது பெருந்தொற்றால் ஏற்பட்டுள்ள நிலை ஒரு பேரிடர் காலப்பகுதியாகும். நாம் அனைவரும் மிக நெருக்கடியான ஆபத்தான காலப்பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

பிறழ்வடைந்த திரிபு வைரஸின் பாதிப்பும் எமது நாட்டில் காணப்படுவதாக மருத்துவ ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இப்பெரும் நெருக்கடியை எவ்வாறு எதிர்கொண்டு எமது மக்களையும் சமூகத்தையும் பாதுகாப்பது என்பது சம்பந்தமாக விசேட மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், மருத்துவ அமைப்புகள், சுகாதாரப் பிரிவினர், ஊடகங்கள் வாயிலாக தங்களது கருத்துகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இப்பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதிலும் தொற்று ஏற்பட்டவர்களின் உயிர்களைப் பாதுகாப்பதிலும் எமது சுகாதாரப் பிரிவின் அனைத்து உத்தியோகத்தர்களும் நேர காலம் பாராது போராடிக் கொண்டிருக்கின்றார்கள். உங்களை பேரழிவிலிருந்து பாதுகாப்பதற்கான இப் போராட்டம் வீணாவதா? மக்களே! ஒரு கணம் சிந்தியுங்கள்! நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கினால் நாம் அனைவரும் பாதுகாக்கப்படுவோம். நாங்கள் இப்பயணத்தில் வெற்றி காண்போம். தற்போது சமூகத்தில் தொற்று அதிகரித்திருக்கின்றது என்பது வெளிப்படையான உண்மை ஏனெனில்

1. சமூகத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது.
2. தொற்றால் ஏற்படும் உயிரிழப்புகளும் அதிகரித்துச் செல்கின்றன. சுகாதார அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக தொற்று ஏற்பட்டவர்கள் உறுதிப்படுத்தப்பட்டு அவர்களுக்குரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.



1. வீட்டுப் பராமரிப்பு
2. இடைநிலை பராமரிப்பு நிலையங்கள்
3. மருத்துவமனைகளில் அமைந்துள்ள கொரோனா சிகிச்சை நிலையங்கள்

தொற்று ஏற்பட்ட ஒருவர் மேற்குறிப்பிட்ட எந்த சிகிச்சை முறைக்குப் பொருத்தமானவர் என்பதை மருத்துவர்கள் சுற்றறிக்கைக்கு அமைவாக தெரிவு செய்கின்றனர்.

வீட்டுப் பராமரிப்பில் தொற்று ஏற்பட்ட நோயாளிகளுக்கான ஆலோசனைகள் தொலைபேசியூடாக மருத்துவர்களால் வழங்கப்படுகின்றது.

ஆபத்தான நிலைமைகள் ஏற்படுகின்றபோது மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும் என்பது பற்றியும் அவர்களுக்கு விளக்கம் வழங்கப்படுகின்றது. யாழ். மாவட்டத்தில் பொது மக்களுக்கான இடைநிலைப் பராமரிப்புக்காக கோப்பாய், வட்டுக்கோட்டை, நாவற்குழி போன்ற இடங்களில் நிலையங்கள் தொழிற்படுகின்றன. யாழ். போதனா மருத்துவமனை, பருத்தித்துறை ஆதார மருத்துவமனை, தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை, சாவகச்சேரி ஆதார மருத்துவமனை, ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனைகளில் சிகிச்சை நிலையங்கள் காணப்படுகின்றன.

கொரோனாப் பெருந்தொற்றால் பல்வேறு பாதிப்புகள் மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன.

1. உயிரிழப்புகள் அதிகரித்திருக்கின்றன.
2. பொருளாதாரம் நலிவடைந்து செல்கின்றது.
3. இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது.

இப்பெரிய அனர்த்தத்திலிருந்து உங்களைப் பாதுகாப்பதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும்.

1. கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்கான சுகாதார விதிமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும்
2. எப்போதும் முகக்கவசத்தை சரியான முறையில் அணிந்திருக்க வேண்டும்.
3. எப்போதும் ஆகக் குறைந்தது 1 மீற்றர் தூரம் சமூக இடைவெளியைப் பேணவேண்டும்.
4. இரண்டு மணித்தியாலத்துக்கு ஒருமுறையாவது சவர்க்காரம் அல்லது தொற்று நீக்கியால் சரியான முறையில் கைகளைக் கழுவவேண்டும்
5. உலக சுகாதார நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற தடுப்பூசிகள் சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்பட்டு வருகின்றன. பொருத்தமான வயதுப் பிரிவினர் சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலுக்கமைவாக தடுப்பூசிகளை கண்டிப்பாக பெற்றுக்கொள்ளவேண்டும். இது எம்மை கொரோனாத் தொற்றால் ஏற்படும் உயிராபத்திலிருந்து பாதுகாக்கும்.
6. உங்களுக்கு தடிமன், இருமல், காய்ச்சல் போன்ற அறிகுறிகள் காணப்படின் நீங்கள் ஏனையவர்களிலிருந்து விலகியிருக்க வேண்டும் அறிகுறிகள் அதிகரிக்குமிடத்து மருத்துவமனையின் உதவியை நாடவேண்டும்.

சுகாதார விதிமுறைகளை சரியாகவும் பொருத்தமாகவும் கடைப்பிடித்து எம்மையும் எமது சமூகத்தையும் கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாப்போம்.




## மேலும் 40 லட்சம் சினோபார்ம் வந்தது

கொழும்பு, செப். 6

சீனாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 4 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகளின் முதலாவது தொகுதி நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் விமானசேவைக்கு சொந்தமான விசேட சரக்கு விமானத்தில் நேற்றுஅதிகாலை குறித்த தடுப்பூசிகள் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.

16ஆயிரத்து 192 கிலோகிராம் நிறைகொண்ட 42 பெட்டிகள் இவ்வாறு முதல் தொகுதியாக கொண்டு வரப்பட்டுள்ளன. இதன் இரண்டாவது தொகுதி இன்று நாட்டுக்கு கிடைக்கப் பெறவுள்ளது.

இலங்கையினால் இதுவரையில் 22 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்று இலங்கையிலுள்ள சீனத்தூதரகம் இதற்கு முன்னர் அறிக்கை ஒன்றை வெளியிட்டு அறிவித்திருந்தது. (த-இ)



## சீனிக் கொத்தணி உருவாகும் அபாயம்

### முருத்தெட்டுவே ஆனந்த தேரர் எச்சரிக்கை

கொழும்பு, செப். 6

நாட்டில் சீனி கொரோனாக்கொத்தணி உருவாகும் அபாயம் உருவாகியுள்ளது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சீனித் தட்டுப்பாடு குறித்து ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்து வெளியிட்ட முருத்தெட்டுவே ஆனந்த தேரர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு முழுவதிலும் தற்பொழுது மக்கள் சீனி பெற்றுக்கொள்ள வரிசையில் நிற்க வேண்டியேற்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் எதிர்வரும் நாள்களில் நாட்டில் சீனிக்காக வரிசையில் காத்திருந்த காரணத்தால் சீனிக் கொரோனாக் கொத்தணி உருவாகும் அபாயம் காணப்படுகின்றது.

சீனிக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்து அரசு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது. இதன்படி நாடு முழுவதிலும் உள்ள சதொச நிறுவனங்களின் ஊடாக குறைந்த விலையில் சீனியை விற்பனைசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோர்ஜ் மாஸ்டர் நேற்று மறைவு

யாழ்ப்பாணம், செப். 7

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றிய ஜோர்ஜ் மாஸ்டர் நேற்று உயிரிழந்தார்.

லேலுப்பிள்ளை குமார்பஞ்சரட்ணம் என்னும் இயற்பெயர்கொண்ட அவர் தனது 85ஆவது வயதில் நேற்றுக் காலமானார். இவர் விடுதலைப் புலிகளுக்கும் அதன் தலைவரான பிரபாகரனுக்கும் பல பேச்சுக்களில் மொழிபெயர்ப்பாளராகச் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# அனைத்துவகை தடுப்பூசிகளையும் வடக்கு கிழக்குக்கு அனுப்புங்கள்

## மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் ஜனாதிபதிக்குக் கடிதம்

வவுனியா, செப். 6

வடக்கு கிழக்கு மக்களின் எதிர்பார்ப்புகளின் அடிப்படையில் அனைத்துவகை தடுப்பூசிகளையும் வழங்குமாறு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் செ.மயூரன் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

ஐரோப்பா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகளுக்கு செல்லும் இலங்கையைச் சேர்ந்த பயணிகள் பைஸர், அஸ்ராஜெனெகா, மொடேர்னா போன்ற கொரோனாத் தடுப்பூசிகளின் இரண்டு செலுத்துகைகளையும் பெற்றிருக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் வெளிநாடு செல்லும் நோக்கத்துடன் இருக்கும் அநேகமான பொதுமக்கள் சீனநாட்டு தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ளாத அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய நெருக்கடியான காலப்பகுதி மற்றும் மேல் மாகாணத்தில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுவரும் முடக்கல் நடவடிக்கைகளால் அநேகமான பொதுமக்கள் அங்குசென்று தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே வடக்கு கிழக்கு பிராந்தியத்துக்கு அனைத்து கொரோனா தடுப்பூசிகளை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேனும் வழங்குவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும். - என்றுள்ளது. (த-110)

# விடுதலைப்புலிகள் மீதான தடை சட்டவாளர்களுடன் ஆலோசனை

## நாடுகடந்த தமிழீழ அரசு நடவடிக்கை

கொழும்பு,செப்.6

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான பிரிட்டனின் தடைக்கு எதிரான அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் சட்டவாளர்களுடன் கலந்தாலோசிக்கப்படுகின்றது என்று நாடு கடந்த தமிழீழ அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தடை செய்யப்பட்ட அமைப்புக்களுக்கான மேல்முறையீட்டு ஆணையத்திடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, பயங்கரவாதத் தடைப்பட்டியலில் விடுதலைப் புலிகளை தொடர்ந்தும் வைத்திருக்கும் பிரிட்டன் உள்துறையமைச்சின் செயல், சட்டமுறைமைக்கு முரணானது என்று ஆணையம் முன்னதாக தீர்ப்பளித்திருந்தது.

எனினும் தமக்கு 90 நாள்கள் அவகாசம் தருமாறு ஆணையத்திடம் பிரிட்டன் அரச தரப்பு கோரியிருந்தது. இந்த நிலையில் விடுதலைப் புலிகள் தொடர்பிலான புதிய ஆதாரங்களுடன் தடை நீடிக்கப்பட்டுள்ளது என்று பிரிட்டன் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்து வரும் 42 நாள்களுக்குள் தடை செய்யப்பட்ட அமைப்புக்களினால் மேன்முறையீட்டு ஆணைக்குழுவில் மேன்முறையீடு செய்யலாம் என்ற நிலையில், தடைக்கு எதிரான சட்டப் போராட்டத்தின் அடுத்த கட்டம் தொடர்பில் சட்டவாளர்களுடன் ஆலோசனை நடத்தவுள்ளோம். -என்றுள்ளது. (ஒ-4)

# முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 80,000 கிலோ சீனி தருவிப்பு

முல்லைத்தீவு,செப்.6

**அரசால் அறிவிக்கப்பட்ட விலை நிர்ணயத்தில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக, மக்களுக்கு சீனியை விநியோகிக்கும் நோக்குடன், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு, முதற்கட்டமாக 80 ஆயிரம் கிலோ கிராம் சீனி கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளது.**



அதற்கமைவாக 20 ஆயிரம் கிலோ பழுப்புச் சீனியும், 60 ஆயிரம் கிலோ வெள்ளைச் சீனியும் முல்லைத்தீவுக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

அவற்றை மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பகிர்ந்தளித்து, மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவு சங்கத்துக்கு 30 ஆயிரம் கிலோவும், புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு 17 ஆயிரம் கிலோவும், ஒட்டுசுட்டான் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு 2 ஆயிரம் கிலோவும், துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு 5 ஆயிரம் கிலோவும், விசுவமடு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு 6 ஆயிரம் கிலோவும் விநியோகிக்கப்படவுள்ளன.

குறிப்பிட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் வெள்ளைச் சீனியை 122 ரூபாவுக்கும், பொதி செய்தால் 125 ரூபாவுக்கும், பழுப்புச் சீனியை 125 ரூபாவுக்கும், பொதி செய்தால் 128 ரூபாவுக்கும் கொள்வனவு செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-19)

# இலங்கைக்கு திரும்ப அஞ்சிய நியூஸிலாந்து தாக்குதல்தாரி!

கொழும்பு, செப்.6

நியூஸிலாந்தின், ஒக்லாந்தில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்திய இலங்கையர் தொடர்பான மேலதிக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நியூ லின் கவுன்டவுன் சூப்பர் மார்க்கெட்டில் கத்திக்குத்துத் தாக்குதல் நடத்தியபோது இலங்கையர் ஒருவர் அந்த நாட்டுப் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார். கத்திக் குத்துச் சம்பவத்தில் ஐந்து பேர் காயமடைந்தனர்.

அஹமது ஆதில் முகமது சம்சுதீன் என்ற 32 வயதானவரே இந்தத் தாக்குதலில் ஈடுபட்டார். இந்த நபர் "அல்லாஹு அக்பர்" என கத்தியபடியே தாக்குதலில் ஈடுபட்டுள்ளார். இவர் மட்டக்களப்பு காத்தான்குடியை சேர்ந்தவர். அவர் மாணவர் விசாவில் 2011ஆம் ஆண்டு நியூஸிலாந்துக்குச் சென்று, இரண்டு வருடங்களுக்குப் பின்னர் அகதி அந்தஸ்துப் பெற்றார். 2018 ஆம் ஆண்டில் குடிவரவு அதிகாரிகள் அவரது அகதி நிலையை இரத்துச் செய்ய முயன்றனர். அவர் மேல்முறையீடு செய்தார். அவரை நாடு கடத்த முடியுமா என்பது தொடர்பாக இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

அவரது அகதி அந்தஸ்து கோரிக்கையில், "இலங்கை அதிகாரிகளால் துன்புறுத்தப்பட்ட தமிழ் மொழி பேசும் ஒரு சிறுபான்மை இனக்குழுவை சேர்ந்தவன். நானும், எனது தந்தையும் அரசியல் பின்னணி காரணமாக கடத்தப்பட்டு, தாக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டோம்" என அவர் கூறியிருந்தார் என்று நியூஸிலாந்து ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவரது கூற்றை அவரது உடலில் உள்ள வடுக்கள் ஆதரித்தன. மனநல நிபுணரின் அறிக்கையும் சம்சுதீன் மன அழுத்தத்துக்கு பிந்தைய மன அழுத்தம் மற்றும் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட "மிகவும் துயரமடைந்த மற்றும் சேதமடைந்த இளைஞன்" என்று கூறினார்.

சம்சுதீனுக்கு அகதி அந்தஸ்து வழங்குவது தொடர்பான குடிவரவு பாதுகாப்பு தீர்ப்பாயத்தின் தீர்ப்பில், மனுதாரர் "தொடர்ந்து அதிர்ச்சிகரமான நிகழ்வுகளை [illegible] அவர் தனது [illegible] பற்றி கோபமாகவும் கவலையுடனும் இருந்தார், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரின் ஆதரவு இல்லாமல், நம்பிக்கையும் முதிர்ச்சியும் இல்லாத நிலையில், வெகு தொலைவில் வாழ்வதன் மூலம் அவரது கவலை அதிகரித்தது என்று அந்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் காரணமாக, சில வாரங்களுக்கு முன்பு, சம்சுதீனுக்கு அகதி அந்தஸ்து ரத்து செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதாவது விரைவில் அவர் இலங்கைக்கு நாடு கடத்தப்படுவார் என்ற தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தனது பெயரைப் பகிரங்கப்படுத்துவது அல்லது இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதனால் தனது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று அவர் அஞ்சினார்.

"இலங்கைக்குத் திரும்ப நான் மிகவும் பயப்படுகிறேன், ஏனென்றால் அங்குள்ள அதிகாரிகளுக்கு நான் பயப்படுகிறேன். நான் என் நாட்டை விட்டு வெளியேறியபோது இருந்த அதே அபாயங்கள் மற்றும் அச்சங்கள் இன்னும் உள்ளன" என்று சம்சுதீன் நீதிமன்றத்தில் ஒரு வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நீதிபதி வழங்கிய தீர்ப்பில், சம்சுதீனின் அகதி நிலை தீர்மானிக்கப்படும் வரை அவரது அடையாளங்களை வெளிப்படுத்த இடைக்கால தடைஉத்தரவை பிறப்பித்தார். ஆனால் நேற்று வெள்ளிக்கிழமை குறைந்தது ஐந்து பேர் கத்தியால் குத்தப்பட்ட பயங்கரவாதச் செயலுக்குப் பிறகு, குறிப்பிடத்தக்க பொது நலனைக் கருத்தில் கொண்டு, அவரது அடையாளத்தை வெளிப்படுத்த விதிக்கப்பட்ட தடை உத்தரவை சனிக்கிழமை இரவு நீதிபதி நீக்கிவிட்டார்.

மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட ஆறு பேரில் ஐந்து பேருக்கு கத்திக்குத்துக் காயங்கள் இருந்தன, மூன்று பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. சம்சுதீனின் தாயார் தற்போது கொழும்பில் வசிக்கிறார். தந்தையும், சகோதரியும் கனடாவில் வசிக்கிறார்கள். சகோதரர்கள் கட்டாரில் தொழில் புரிந்துவருகிறார்கள். தாக்குதலுக்குப் புறப்படுவதற்கு முன்னதாக தனது தந்தையை தொலைபேசியில் அழைத்து, சாப்பாடு எடுக்கச் செல்கிறேன் என்று கூறிவிட்டு சென்றுள்ளார் என்று நியூஸிலாந்து ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்களுக்காக....

இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோவும், புளொட்டும் ஒரு அறிக்கையை அனுப்ப, தமிழரசுக் கட்சி இன்னொரு அறிக்கையை அனுப்புகின்றது. அந்த வரைவில் தமிழீழ விடுதலைப் புலிகள் இழைத்த போர்க்குற்றம் தொடர்பிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. நாம் இதை எதிர்த்தால் புளொட், ரெலோ பிறிதொரு அறிக்கையை அனுப்பியதே என்பார்கள். இவர்கள் அனைவரும் இணைந்துசெய்யும் இரட்டைவேடம்தான் இது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கை அரசைப் பாரப்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தொடர்ச்சியான நிலைப்பாடாகும். இவ்வாறான ஒரு நிலையில் சர்வதேச விசாரணை வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் காத்திருக்கும் நிலையில் மக்களுக்காகப் போராடியவர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என கோருகிறது.

கடந்த மார்ச் மாத ஐ.நா. அமர்விலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தை காப்பாற்றிய நிலையில் மீண்டும் ஒருமுறை அரசாங்கத்தை காப்பாற்றும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது. தனது இனத்துக்காக போராடியவர்களை அதே இனத்துக்காக போராடுபவர்கள் காட்டிக் கொடுத்த வரலாறு எம் மண்ணில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரான சுமந்திரன் ஒவ்வொரு ஐ.நா. அமர்வுக்கு ஒரு மாதத்துக்கு முன்னர் முஸ்லிம் இனச்சுத்திகரிப்பு எனப் பேச ஆரம்பித்துவிடுகிறார். அவர் இவ்வாறு பேசுவது யாரோ ஒரு தரப்பை திருப்திப்படுத்துவதற்காத் தான் என நான் நினைக்கிறேன் என்றார். (ம20,26)

## தொடர்...

பொறுமையின் எல்லையில் இருக்கின்றோம் இவ்வாறு வடக்கு கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

அண்மைக்காலமாக வடக்கு கடற்பரப்புகளில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் அதிகரித்துள்ளது என்று வடக்கு கடற்றொழிலாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். இந்திய ட்ரோலர் படகுகள் வடக்கு மீனவர்களின் வலைகளை அறுப்பதுடன், கடல் வளத்தையும் அள்ளிச் செல்கின்றன என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்சம்மேளனத்தின்தலைவர் அன்னராசா மற்றும் வர்ணகுலசிங்கம் ஆகியோர் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது

இந்திய மீனவர் அத்துமீறல் விடயத்தில் இலங்கை அரசு அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்கிறது. கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா மீதும் நம்பிக்கையிழந்துவிட்டோம். எமது கடல் வளத்தையும், எமது வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க நாமே நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகளினால் எமது தொழில் உபகரணங்கள் அழிக்கப்படுகின்றன. அண்மைய நாள்களில் மட்டும் எமது கடற்றொழிலாளர்களின் பல மில்லியன் ரூபா பெறுமதியான தொழில் உபகரணங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன.

இந்தியக் கடற்றொழிலாளர்களின் செயற்பாடுகள் எமது கடற்றொழிலாளர்களை அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளன. கடலுக்கு செல்வதற்கே நம்மவர்கள் அஞ்சுகின்றனர். எங்களுடைய மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தப் பிரச்சினை பல ஆண்டுகளாக தொடர்கின்ற போதிலும் எமது பிரதிநிதிகள் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. கடற்றொழில் அமைச்சர் எமக்குப் பல வாக்குறுதிகள் வழங்கினார். ஆனால் மாற்றங்கள் எதுவும் நடக்கவில்லை. கடற்றொழில் அமைச்சர் மீது வைத்த நம்பிக்கையையும் இழந்துள்ளோம்.

எமது மக்களை அணி திரட்டி போராட்டங்களை நடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். கட்டம் கட்டமாக மக்கள் போராட்டங்களைத் தீவிரமாக்கத் தீர்மானித்துள்ளோம். முதற்கட்டமாக சமூக இடைவெளிகளை மதித்து, போராட்டங்களை ஒழுக்கமைக்கவுள்ளோம்.

அடுத்த கட்டமாக யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்துக்கு முன்னால் போராட்டத்தை நடத்தவும், கடலில் இறங்கி கறுப்புக் கொடிப் போராட்டதை நடத்துவது தொடர்பாகவும் தீவிரமாக சிந்தித்து வருகின்றோம். என்றார். (எ20)

## அரசினது...

விவகாரத்தில் அரசின் நிலைப்பாடு என்னவென்பதை அறிக்கையூடாக நாம் ஐ.நாவுக்கு அனுப்பிவைத்துள்ளோம் இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

'இலங்கை அரசு மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து தமிழ்க் கட்சிகள் ஐ.நாவுக்கு அனுப்பும் அறிக்கைகள் உப்புச்சப்பற்றவை. இந்த அறிக்கைகளைத் தூக்கி வீசுங்கள். இலங்கை அரசு மீது உள்நாட்டுத் தரப்பினரும் வெளிநாட்டுத் தரப்பினரும் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கும் வகையில் ஐ.நாவுக்கு நாம் அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளோம். ஐ.நா. தீர்மானத்திலுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இலங்கை அரசு எடுத்துள்ள முன்னேற்றகரமான நடவடிக்கைகளை இந்த அறிக்கையில் உள்ளடக்கியுள்ளோம்' என்றார். (ம-22)

## தமிழரசுக்...

செயல் தமிழரசுக் கட்சியின் இரட்டை வேடத்தை தெளிவுபடுத்துகின்றது என்று தெரிவித்தார் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவரான சுரேஸ் பிறேமச்சந்திரன்.

ஜெனீவா விவகாரம் தொடர்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 13ஆம் திகதி ஜெனீவா அமர்வு இடம்பெறவுள்ளது. அதில் இலங்கைப் பிரச்சினை தொடர்பாக வாய்மூல அறிக்கையும் சமர்ப்பிக்கப்படவுள்ளது. கடந்த மார்ச் மாதம் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் இலங்கையில் என்ன வகையிலான விடயங்கள் இடம்பெற்றிருக்கின்றன என்பது தொடர்பிலும் அதில் கவனம் செலுத்தப்பட வாய்ப்பிருக்கின்றது.

எனவே இந்தக் கூட்டத்தில் தமிழர்களின் பிரச்சினைகளை ஒருமித்துச் சொல்லவேண்டும் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் உள்ள 4 கட்சிகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள 3 கட்சிகளும் இணைய கலந்துரையாடல்களில் தீர்மானித்திருந்தோம். இந்தக் கூட்டத்தில் ஒரு பொதுவான அறிக்கை தயாரிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. சுமந்திரன் அந்த அறிக்கையைத் தயாரிப்பார் என்று தீர்மானிக்கப்பட்டது. எனினும் அது தயாரிக்கப்படாத நிலையில் நாம் சிலர் சேர்ந்து அந்த அறிக்கையைத் தயாரித்தோம். இந்த அறிக்கையில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா கையொப்பமிடுவார் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அவர் கையொப்பமிடமில்லை. அந்த அறிக்கையில் கடந்த சில மாதங்களாக தமிழ் மக்களின் நிலப்பரப்பில் இடம்பெற்றுவரும் அத்துமீறல்களும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரங்களும் பட்டியலிடப்பட்டுள்ளன. ஆனால், தமிழரசுக் கட்சியும் தனித்து ஒரு அறிக்கையைத் தயாரிக்கின்றது. அந்த அறிக்கையில் பான் கீ மூன் அமைத்த விசாரணைக்குழு சுட்டிக் காட்டிய, 'இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் போர்க் குற்றத்தில் ஈடுபட்டன என்ற விடயம்தமிழரசுக் கட்சியால் உள்வாங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அவர்கள் சொல்ல வருவது என்ன?. அரசும், விடுதலைக்காக போராடிய குழுவும் போர்க் குற்றத்தில் ஈடுபட்டன என்று தமிழரசுக் கட்சி தயாரித்துள்ள அறிக்கை உண்மையில் அறிவிலித்தனமானது. இது அந்தக் கட்சியின் இரட்டை வேடத்தைத்தான் சுட்டிக்காட்டுகின்றது - என்றார். (ம)


## மரண அறிவித்தல்

மண்ணில் 19 12 1938

விண்ணில் 04 09 2021



### திருமதி துரைஐயா நாகேஸ்வரி

(கமலா ஸ்ரோர்ஸ் உரிமையாளரின் தாயார்)

யாழ் ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் சாங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட துரைஐயா நாகேஸ்வரி அவர்கள் நேற்று (04.09.2021) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சொக்கலிங்கம் நாகம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற துரைஐயா அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் ரவிச்சந்திரன், ரஞ்சிதமலர், பிரேமச்சந்திரன் (கமலா ஸ்ரோர்ஸ்), ராமச்சந்திரன், சாந்தினி, ஜெயந்தினி (லண்டன்), யாழினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சாமுண்டேஸ்வரி, அமரர் சக்திவேல் மற்றும் விக்னேஸ்வரி, சாந்தினி, சிவராசா, சதீஸ்குமார், சிவனேந்திரன் ஆகியோரின் மாமியாரும், சந்திரகாந், சிந்துஜா, மிதுலா, அமல்ராஜ், சகிலா, நிரோஷன் (கமலா ஸ்ரோர்ஸ்), மதுஷா, மதுரந்தி, சாங்கவி, வேணுஷா, பிரியங்கா, நிவேதா, சஞ்சீவன் (அமெரிக்கா), சாருஜன், கிருஷிகா, கோபிதா, மகிஷா, சந்தோஷ், ரஷிதா, நித்தியானந்தன், யுகந்தன், நிஜானி, வரோதயன், ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அக்ஷயன், சபி, சயந்தினி, கிருத்திக், ரம்சிகா ஆகியோரின் பூட்டியுமாவார்.


## 30 முதல் 40ரூபா வரை பருப்பு விலை எகிறியது

கொழும்பு, செப். 6

ஒரு கிலோ பருப்பின் விலை 30 முதல் 40 ரூபா வரை உயர்த்தப்பட்டுள்ளது என நுகர்வோர் மற்றும் வியாபாரிகள் தெரிவிகின்றனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

சந்தையில் கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. சில கடைகளுக்குக் கோதுமை மா வழங்குவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சீனிக்குக் கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டிருந்தாலும், விதிக்கப்பட்ட மொத்த விலையில் சீனி வழங்கப்படாது. வழங்கல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது - என்றனர்.

இதேவேளை, இறக்குமதி நிறுவனங்கள் கோதுமை மாவின் விலையை அதிகரிக்கமாட்டோம் என்று ஒப்புக்கொண்டன என்று கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார். (ம22)

## நேற்றும் நான்கு பேர் கொரோனாவால் பலி

வவுனியா, செப். 6

வவுனியாவில் நேற்று நான்கு பேர் கொரோனாவால் உயிரிழந்தனர்.

வவுனியா மருத்துவமனையில் சுகவீனம் காரணமாக சேர்க்கப்பட்ட மூவருக்குத தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், அவர்கள் சிகிச்சை பயனளிக்காது நேற்று இறந்தனர். அத்துடன் திடீரென சுகவீனமுற்ற ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் அவருக்கு முன்னெடுத்த சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ம26,110)

## கொரோனா 3,308

கொழும்பு, செப். 6

இலங்கையில் மேலும் 3 ஆயிரத்து 308 பேர் கொரோனா தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 62 ஆயிரத்து 767ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 2 ஆயிரத்து 81 பேர் குணமடைந்துள்ளனர். இதற்கமைய, நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 லட்சத்து 84 ஆயிரத்து 557ஆக உயர்வடைந்துள்ளது. (ம22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 09 . 09 . 1944

இறப்பு 05 . 09 . 2021

## அமிர்தகலா்தேவி நாகேஸ்வரசர்மா

இணுவிலைப் பிறப்பிடமாகவும் சுதுமலை மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட அமிர்தகலாதேவி நாகேஸ்வர சர்மா நேற்று (05.09.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தீஸ்வரக்குருக்கள் சாரதாம்பாள் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினக்குருக்கள் பாலாம்பிகைஅம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகேஸ்வரசர்மா அவர்களின் அன்பு மனைவியும், நாகபூஷணி, தாரிணி, காலஞ்சென்ற மதுசூதனன் மற்றும் பாமினி, ஜனார்த்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், லக்ஷ்மணஐயர், ஜெகன்நாதன்சர்மா, ஜீவசங்கரசர்மா, அபர்ணா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சமீசீணாம்பாள், சிவகலா மற்றும் சோமஸ்கந்தகுருக்கள் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுபஜன்னி-ஜெயந்தன், நிவேதினி-கிருஷ்ணராஜ், பிரகதீஸ்வரன், ரோகிணி, ஸனார்தனன், கேயூரன், ஹம்ஸத்வணி, ஆரபி, ராகவி ஆகியோரின் பேர்த்தியும், நியந்திரி, நிரந்தரா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சுதுமலை, மானிப்பாய்**
**(மகன்-ஜனார்த்தன்)**
**0776143359**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# கண்ணீர் அஞ்சலி

வட மாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி மன்றத்தில் நிர்வாக உறுப்பினராக உள்ள **வைத்திய கலாநிதி திருமதி S.அனுஷியா** அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர் கந்தையா மகாலிங்கம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**வட மாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி மன்றம்**

# நினைவஞ்சலி

முதலாமாண்டு | 15ம் ஆண்டு



தோற்றம் 06.04.1925
மறைவு 18.08.2020
திதி: ஆவணி அமாவாசை 06.09.2021

தோற்றம் 25.07.1931
மறைவு 18.08.2006
திதி: அபரபட்ச ஏகாதசி 03.09.2021

அமரர் **கணபதிப்பிள்ளை சின்னத்துரை**

அமரர் **சின்னத்துரை சுபத்திரை**

மறைந்தும் மறையாமல் எமது அன்புத்
தெய்வங்களின் நினைவு ஆண்டுகள் 15-1
ஆத்மா சாந்தியடைய சுதுமலை அம்பாள்
பொற்பாதத்தில் வேண்டுகின்றோம்.

**'சுபத்திர மஹால்'**
**கொக்குவில்.**

**குடும்பத்தினர்.**
**மகன்மார், மகள்,**
**மருமகள்மார், மருமகன்,**
**பேரப்பிள்ளைகள்**

# கண்ணீர் அஞ்சலி



## சிவபாக்கியன் சிவயோகன்

**ஓய்வுபெற்ற விடுதி பொறுப்பு தாதிய**
**உத்தியோத்தர் விடுதி இல 7**
**பல்கலைகழக மருத்துவபிரிவு**
**போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்.**

**பிறப்பு** 16 . 12 . 1961

**இறப்பு** 05 . 09 . 2021

**அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

உங்கள் பிரிவால் துயருறும்..
வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள்,
தாதிய உத்தியோகத்தர்கள்,
சுகாதார உதவியாளர்கள், பல்கலைகழக
மருத்துவ பிரிவு உத்தியோகத்தர்கள்
(விடுதி இல 1&7, பல்கலைகழக மருத்துவ பிரிவு,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழங்குடிகளின் தலைவருடைய மனைவி கொரோனாவால் சாவு

கொழும்பு, செப். 6

தம்பானே பழங்குடிகளின் தலை வர் ஊருவரிகே வன்னிய லத்தோவின் மனைவி ஹீன் மெனிக்கா கொரோனாத் தொற்றுக் காரணமாக நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

நிமோனியா காரணமாக மஹியங்கனை மருத்து வமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் பேராதனை போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு, அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை மேற்கொண்டு வந்த நிலையிலேயே அவர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார். (த-இ)

## பணியாளர் தேவை

யாழ் மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு Cashier மற்றும் Delivery Boy தேவை. வயதெல்லை 30 இற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

தொடர்புகொள்ளவேண்டிய இலக்கம்:

**077 314 7580**

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
16
04
1943



மறைவு
25
08
2014

**அமரர் அன்னலட்சுமி சங்கரப்பிள்ளை**


**திதி-அம்மாவாசை**

நீங்கள் இவ் உலகை விட்டு நீங்கி
ஆண்டுகள் ஏழு சென்றாலும்
எம்மை விட்டு நீங்காத உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

**"மலரகம்" கொட்டைகாட்டு வீதி,**
**கோண்டாவில் கிழக்கு.**

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## அண்ணாமலை குலசிங்கம்

**(குலசி-பிரகாஸ் ரான்ஸ்போட் உரிமையாளர்)**

குரும்பசிட்டியை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பிரகாஸ் ரான்ஸ்போட் உரிமையாளர் அண்ணாமலை குலசிங்கம் கடந்த (04.09.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அண்ணாமலை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரட்ணசிங்கம் - மனோண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், இரட்ணராணி இன் அன்புக் கணவரும், தாட்சாயினி (கொழும்பு) விபூசனன் (கனடா), தாரகா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கபிசன், சஞ்சனா, அவீசா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிப்பப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ராஜா மில் ஒழுங்கை,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# கண்ணீர் அஞ்சலி



யாழ் சுதுமலை வடக்கு தமிழ் கலவன் வித்தியாசாலை அதிபர்
**திரு. சுப்பிரமணியம் துரைரத்தினம்**
அவர்களின் அன்புத் தந்தை

## திரு. சிவசம்பு சுப்பிரமணியம்

அவர்கள் கடந்த (03.09.2021) இறைபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர்கள், ஓய்வுநிலை ஆசிரியர்கள்**
**மற்றும் மாணவர்கள்**
**யா/சுதுமலை வடக்கு தமிழ் கலவன் வித்தியாலயம்**

# என்றும் நெஞ்சைவிட்டு நீங்காத நினைவலைகள்

**31ஆவது வருட** **7ஆவது வருட**

உதயம்
18.06.1933



அஸ்தமனம்
20.08.1990



உதயம்
02.07.1935

அஸ்தமனம்
27.08.2014

**தோலகட்டி, வயாவிளான்**
**அமரர் வைத்திலிங்கம்**
**நடராசா**
(முன்னாள் பொறுப்பதிகாரி, வலி. கிழக்கு பிரதேசசபை, - அச்சுவேலி)
**திதி: 06.09.2021**

**தோலகட்டி, வயாவிளான்**
**திருமதி சிவபாக்கியம்**
**நடராசா**
**திதி : 08.09.2021**

அன்புடனும், பாசத்துடனும், எம்முடன் வாழ்ந்து நாம் சிறப்புடன் வாழ வழிகாட்டி, எம்மை எல்லாம் விட்டு மறைந்த எங்களின் அன்புத் தெய்வங்கள் அப்பா, அம்மாவே! ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும் எங்களின் இதயங்களில் உங்களின் நீங்காத நினைவலைகளை சுமந்தபடி ஆண்டு தோறும் நல்லூரானின் தீர்த்தக்கரையில் நின்று கொண்டு கண்ணீர் பூக்களினால் உங்களின் பாதங்களுக்கு சமர்ப்பிக்கும் நாங்கள்!

**இல. 27/5, மெமோறியல் லேன்,**
**மானிப்பாய்.**
**077 995 6974, 021 225 5252**

**[illegible]**
**[illegible]**
**மருமக்கள் மார், பேரப்பிள்ளைகள்.**

# மரண அறிவித்தல்



## ஞானப்பிரகாசம் பிரகாஸ்

**(சுயாதீன ஊடகவியலாளர்)**

வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. ஞானப்பிரகாசம் பிரகாஸ் (சுயாதீன ஊடகவியலாளர்) கடந்த (02.09.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு-ஆனாசி தம்பதியரினதும், உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மாசிலாமணி-மேரியம்மா தம்பதியரினதும் இளைய பேரனும், ஞானப்பிரகாசம் (லால்)-மெற்றில்டா தம்பதியரின் பாசமிகு இளைய மகனும், கிசோர் (முன்னாள் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்), சர்மிளா (கிராம அலுவலர், பிரதேச செயலகம், தென்மராட்சி), பிரசாந் (Fox Resorts, Jaffna) ஆகியோரின் பாசமிகு இளைய சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.09.2021) திங்கட்கிழமை கோம்பயன்மணல் இந்து மயானத்தில் மின் தகனம் செய்யப்பட்டு அஸ்தி அல்லாரை புனித செபமாலை அன்னை ஆலய சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**வெள்ளம்போக்கட்டி,**
**கொடிகாமம்.**

**சி.ஞானப்பிரகாசம்:0776531621**
**ஞா.கிசோர் : 0774897325**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு • 31 • 12 • 1942



இறையடி • 02 • 09 • 2021

## காசிபகோத்ரம் சிவஸ்ரீ சி.சிவசுப்ரமணிய சிவாச்சாரியார்

கொக்குவிலை பிறப்பிடமாகவும்.சுழிபுரத்தை வதிவிடமாகவும் கொண்டு காரைநகர் துறைமுகம் பிள்ளையார் கோவில். பலகாடு ஸ்ரீ ராஜேஸ்வரி அம்மன்கோவில் வலந்தலை கண்ணகியம்மன் கோவில். சிவகாமியம்மன் கோவில். சுழிபுரம் ஐயனார், பெரியதம்பிரான் கோவில்களின் முன்னைநாள் ஆலய குருவும், பொற்பதி விநாயகர் உட்பட பலகோவில்களின் மகோற்ஸவ குருவுமான காசிபகோத்ரம் சிவஸ்ரீ சி.சிவசுப்ரமணிய சிவாச்சாரியார் கடந்த (02.09.2021) வெள்ளிக்கிழமை சிவகதியடைந்தார்.

அன்னார் காலம் சென்ற சிவஸ்ரீ சிவசாமிக் குருக்கள் கமலாம்பியம்மா தம்பதிகளின் மூத்த மைந்தனும். இந்துராணியம்மா ராஜேந்திரக்குருக்கள் சிவராமலிங்க சர்மா மற்றும் காலம்சென்ற பஞ்சாசர சர்மா இரத்தினசபாபதி சர்மாவினது மூத்த சகோதரரும், காலம்சென்ற சிவஸ்ரீ வைத்தீஸ்வர குருக்கள் பட்டம்மா தம்பதிகளது மூத்த மருமகனும் காலம்சென்ற ஸ்ரீமதி ஜெயலக்ஷ்மி அம்மாவின் கணவரும் பிரம்மஸ்ரீ ந.தியாகராஜ குருக்கள் இரத்தினம்மா, ச. சுந்தரமூர்த்தி சர்மா புவனேஸ்வரி ஸ்ரீ கிருஷ்ணன் திரிபுரசுந்தரி ஆகியோரது சம்மந்தியும், சிவஸ்ரீ தி. நடராஜ சிவாச்சாரியர், பிரம்ம ஸ்ரீ உதயசங்கர சர்மா, ஸ்ரீமதி மாலினிப்பிரியா (மாலிகா) ஆகியோரது மாமனாரும், பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வர சர்மா, ஸ்ரீமதி ந.சிவனேஸ்வரி அம்மா, ஸ்ரீமதி உ.ஜெகதீஸ்வரி அம்மா ஆகியோரது தந்தையும், செல்வி கிருஷ்ணாணுஜ, செல்வன் ஜைமினிய சர்மா ஆகியோரது பாட்டனாரும் ஆவார்.

**மேலதிக தொடர்புகளுக்கு:**

தி. நடராஜசிவாசாரியார் - கொக்குவில் 094 0774712555
094 771751456

சி .வைத்தீஸ்வரன் (சிட்னி அவுஸ்திரேலியா) - 00610425666725

உதயசங்கர் ஜெகதீஸ்வரி அம்மா - 0777 178836

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கால அவகாசம்....

ஆனால், இந்தக் கால அவகாசம் முடிந்த பின்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகள் மனித உரிமைகள் ஆணையாளருக்கு கடிதம் அனுப்பும் நடவடிக்கையில் இறங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகின்றன. இனிமேல் அனுப்பப்படும் எந்தவொரு அறிக்கையும் 48ஆவது கூட்டத்தொடரில் சேர்த்துக் கொள்ளப்படுதற்கான சாத்தியமே இல்லை இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சிகளின் திருகுதாளத்தை அம்பலப் படுத்தியுள்ளார் சர்வதேச இராஜதந்திரத் தளங்களில் தமிழர்களின் உரிமைக்காகத் தொடர்ச்சியாக இயங்கிவரும் மனிதவுரிமைச் செயற்பாட்டாளரான மரியதாஸ் மோகன்ராஜ் (பொஸ்கோ).

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடருக்கு அறிக்கை சமர்ப்பிக்க விரும்பும், பாதிக்கப்பட்ட தரப்புகள் குறித்த கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு 21 நாள்களுக்கு முன்னரே அவற்றை அனுப்பி வைக்க வேண்டும். அதுவும் ஐ.நாவின் Ecosoc அங்கீகாரம் பெற்ற அமைப்புகள் ஊடாக அனுப்பப்படும் அறிக்கைகள், கடிதங்களே உத்தியோகபூர்வ ஆவணங்களாக ஏற்றுக் கொள்ளப்படும். தனியே கட்சி ரீதியாக நேரடியாக அனுப்பும் ஆவணங்கள் ஒருபோதும் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படாது.

அந்த வகையில் ஜெனிவா நேரப்படி கடந்த ஓகஸ்ட் 22ஆம் திகதி நள்ளிரவுக்கு முன்னதாக ஈழத்தமிழர்கள் சார்பிலான ஆவணங்கள் அனுப்பப்பட்டிருக்க வேண்டும். புலம்பெயர் தேசங்களில் இயங்கும் அமைப்புகள் ஊடாக அவ்வாறு 27 ஆவணங்கள் இதுவரை ஐ.நா.வில் சமர்ப்பிக்கப்பட்டபோதும், துரதிர்ஷ்டவசமாக இலங்கையில் ஈழத் தமிழர்கள் சார்பில் இருந்து எந்தவொரு அமைப்புகளோ, கட்சிகளோ குறித்த கால அவகாசத்துக்குள் ஆவணங்கள் எதனையும் அனுப்பி வைக்கவில்லை. அதேவேளை, மனித உரிமைகள் ஆணையாளரினால் இலங்கை தொடர்பில் வாய்மொழிமூலமாக முன்வைக்கப்படவுள்ள அறிக்கையின் இறுதி வடிவம் சகல நாடுகளுக்கும் அனுப்பப்பட்டு விட்டது. இலங்கை அரசாங்கமும் தன் சார்பிலான அறிக்கையை ஐ.நா.வுக்கு அனுப்பிவைத்துள்ளது.

இத்தகைய நிலையில், கால அவகாசம் முடிந்த பின்னர் இப்போதுதான் அவ்வாறான ஆவணங்களை தமிழ்த் தேசியக் கட்சிகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அனுப்பி வைக்க இருப்பதாக தகவல்கள் வெளியாகின்றன. உண்மையில் இது மக்களை ஏமாற்றும் செயற்பாடுதான். இனிமேல் அனுப்பி வைக்கப்படும் எந்தவொரு ஆவணமும் 48ஆவது மனித உரிமைகள் பேரவை அமர்வில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது. வேண்டுமானால் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள அமர்வில் சேர்த்துக் கொள்ளப்படலாம். அதுகூட ஐ.நா.வால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் அமைப்பின் ஊடாக அனுப்பினால் மாத்திரமே சாத்தியம். மாறாக கட்சி சார்பாக அனுப்பிவைக்கப்படும் ஆவணங்கள் உத்தியோகபூர்வமற்றவையாகக் கணிக்கப்படுவதால், கூட்டத்தொடரில் சேர்த்துக் கொள்வதற்காகப் பரிசீலிக்கப்படாது என்றார்.

இதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகள் கால அவகாசம் முடிந்த பின்னரே ஐ.நா.வுக்கு கடிதம் அனுப்புவதாகக் கூறி தமிழ் மக்களை ஏமாற்றும் செயல் வெளிச்சத்துக்கு வந்துள்ளது என அவதானிகள் கூறுகின்றனர். (அ)

## மேலும் 189....

பதிவாகியுள்ள கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து 140ஆக அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் பலியானோரில் 96 ஆண்களும், 93 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

## நல்லூர்....

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்றுக் காலை மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

சுகாதார நடைமுறைகளின் கீழ் ஆச்சாரியார்கள், மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான தொண்டர்களுடன் உள் வீதியில் தேர்த்திருவிழா இடம்பெற்றது.

அதிகாலை இடம்பெற்ற சிறப்பு அபிஷேக ஆராதனைகள், வசந்தமண்டப பூஜையைத் தொடர்ந்து சிவாச்சாரியர்கள் வேதங்கள் ஒலிக்க காலை 7 மணிக்கு சண்முகப் பெருமான் முன்னேவர வள்ளி, தேவசேனா சமேதரராக வேலவர் பிள்ளைத் தேரில் உள்வீதியுலா வந்து காட்சியளித்தார்.

நல்லூர்க் கந்தனின் அடியவர்கள் வீட்டிலிருந்து வழிபாடுகளை முன்னெடுக்கும் வகையில் தேவஸ்தானத்தினால் நேரலையில் நிகழ்வுகள் ஒளி பரப்பப்பட்டன. (ம)

## கொழும்பின் ....

மனித உரிமைகள் ஆணையாளருக்கு அம்பலப்படுத்தவுள்ளோம் இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

'ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரையொட்டி ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளருக்குக் காத்திரமான அறிக்கை ஒன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனுப்பவுள்ளது. இது தொடர்பில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடன் பேச்சு நடத்தப்படும். அதன்பின்னர் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுகூடி அறிக்கையை இறுதி செய்வார்கள்.

இந்த அறிக்கையில் ஐ.நாவின் 46/1 தீர்மானத்தின் பரிந்துரைகளை நிறைவேற்றாமல் இலங்கை அரசு காலத்தைக் கடத்துகின்றமை, பயங்கரவாதத் தடைத் சட்டம் நீக்கப்படாமை, கொரோனாவைக் காரணம் காட்டி அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமை, சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் இராணுவ அதிகாரிகளை நியமித்தமை, தமிழ் மக்களை இலக்குவைத்து வடக்கு, கிழக்கில் தொடரும் கைதுகள், காணி அபகரிப்பு, நினைவேந்தல்களுக்கான தடைகள், அரசியல் கைதிகள் விவகாரம், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் உள்ளிட்ட பல விடயங்கள் உள்ளடக்கப்படும்' என்றார்.

(ம-22)

## கூட்டமைப்பை....

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எந்தச் சக்தியாலும் பிளவுபடுத்த முடியாது இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்ற தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து, தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பத் தயாரித்த அறிக்கையில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ரெலோவும், புளொட்டும் கையெழுத்திட்டுள்ள விவகாரம் சூடுபிடித்துள்ளது. இது கூட்டமைப்புக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது என்பதை வெளிக்காட்டுகின்றது என ஊடகங்களில் நேற்று செய்திகள் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளாகத் தற்போது இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ மற்றும் புளொட் ஆகிய மூன்று கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்ற ஏனைய தமிழ்க் கட்சிகள், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பத் தயாரித்த அறிக்கையில் கூட்டமைப்பின் இலங்கைத் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய இரு பங்காளிக் கட்சிகள் (ரெலோ, புளொட்) கையெழுத்திட்டமை தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது. இது தொடர்பில் எனக்கு அறிவிக்கப்படவும் இல்லை. எனவே, இந்த விடயம் தொடர்பில் என்னால் கருத்துத் தெரிவிக்கவும் முடியாது. ஆனால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளருக்கு அறிக்கை அனுப்பும் விவகாரத்தைப் பயன்படுத்தித் தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எந்தச் சக்தியாலும் பிளவுபடுத்த முடியாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிவைக்க விரும்புகின்றேன்' என்றார். (ம-22)

## புலிகளின்....

இன்றையதினமே இறுதி முடிவுகளை தமிழரசுக் கட்சி எடுக்கவுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அறிக்கை அனுப்பும் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கை தமிழரசுக் கட்சி தவிர்ந்த மற்றைய இரண்டு பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் ஆகியவை கூட்டமைப்புக்கு வெளியிலுள்ள தமிழ்க் கட்சிகள் தயாரித்த அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளன.

தமிழரசுக் கட்சியின் அறிக்கையில், புலிகளின் போர்க்குற்றம் பற்றியும் வலியுறுத்தப்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இதர தரப்புக்களும் நேற்று குற்றச்சாட்டை முன்வைத்தன. இந்த நிலையில் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு குறுகிய ஓரிரு மணி நேர முன்னறிவித்தலில் நேற்று இரண்டு மணி நேரம் மெய்நிகர் முறையில் கூடியது.

கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சி.வீ.கே.சிவஞானம், பொன். செல்வராசா, மருத்துவர் சத்தியலிங்கம், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், குலநாயகம், த.கலையரசன், கி.துரைராஜசிங்கம் ஆகிய ஒன்பது பேர் பங்குபற்றினர். இரா.சம்பந்தனும், சட்டத்தரணி கே.வி. தவராசாவும் கலந்துகொள்ளவில்லை. இந்தக் கூட்டத்தில் காரசாரமான வாக்குவாதங்கள் இடம்பெற்றன என்று தெரிய வருகின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில்கூடி ஆராய்ந்து, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பவுள்ள அறிக்கையில் என்னென்ன விவகாரங்கள் இடம்பெற்றுள்ளன. புலிகளின் போர்க்குற்றம் பற்றியும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதா, 46/1 தீர்மானத்தை தமிழரசுக் கட்சியின் அறிக்கை பிரதிபலிக்கின்றதா என்ற தெளிவுபடுத்தல்களை வழங்கவுள்ளனர். (ம-22)

## மூச்செடுக்க....

உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

குறித்த பெண் கடந்த இரண்டு தினங்கள் மூச்சு எடுப்பதற்கு சிரமப்பட்ட நிலையில் நேற்று நோயாளர் காவு வண்டி மூலம் சங்கானை பிரதேச மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அழைத்துச் செல்லப்படும் வழியில் உயிரிழந்ததால் அவரது சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. பி.சி.ஆர். சோதனைக்குரிய மாதிரிகள் சடலத்திலிருந்து பெறப்பட்டுள்ளன. (ம-27)

## கொரோனா....

தொடர்பிலேயே இருக்கிறோமென யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரை 20 சடலங்களைப் பாதுகாப்பதற்கான குளிரூட்டி வசதிகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் காணப்படுகின்றன. இந்த நிலையில் 15 சடலங்கள் தற்போது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன.

மருத்துவமனையில் மேலதிகமாக சடலங்களை வைத்திருக்காமல் எரியூட்டும் நிலையங்களுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளை செய்துவருகிறோம். நேற்று இரண்டு சடலங்களை அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள எரியூட்டல் நிலையங்களுக்கு அனுப்பியுள்ளோம். இதுதவிர யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள எரியூட்டும் நிலையத்திலும் சடலங்களை எரியூட்ட கிரமமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். தற்போது நிலைமை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. முன்னாயத்த நடவடிக்கைக்காக நாட்டிலுள்ள வேறு இடங்களில் உள்ள எரியூட்டல் நிலையங்களுடனும் தொடர்பில் இருக்கிறோம்.

மரணமடைந்தவரின் உறவினர்கள் சிலரை எரியூட்டும் பகுதிக்கு அனுப்புவதுடன் உரிய முறையில் உடல் தகனம் செய்யப்பட்டு சாம்பலை கையளிக்கும் விடயத்தில் நாங்கள் சரியான முறையில் செயற்படுவோம்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நான்கு விடுதிகளில் 123 தொற்றாளர்களுக்கு தற்போது சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. கொரோனாத் தொற்று ஏற்பட்டுவிட்டது என்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவமனைக்கு வாருங்கள். கொரோனாத் தொற்று ஏற்பட்டு அடுத்த மூன்று அல்லது நான்கு நாள்களுக்குப் பின்னர் நிமோனியாக் காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மருத்துவ உதவிகளை முன்கூட்டியே பெறுவதற்கான ஏற்பாடுகளை அனைவரும் மேற்கொள்ள வேண்டும் என்றார். (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷை 78 ஓட்டங்களில் சுருட்டித் தள்ளியது நியூசிலாந்து

## தொடரில் தன் இருப்பையும் தக்கவைத்தது

**டாக்கா, செப். 6**

**பங்களாதேஷுக்கு எதிரான மூன்றாவது ரி20 ஆட்டத்தில் 52 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரில் தன் இருப்பைத் தக்க வைத்தது நியூசிலாந்து.**




இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ரி20 தொடர் பங்களாதேஷில் நடைபெற்று வருகின்றது. முடிவடைந்த முதலிரு ஆட்டங்களிலும் பங்களாதேஷ் வெற்றிபெற்ற காரணத்தால் தொடரில் தன் இருப்பைத் தக்கவைக்க வேண்டுமாயின் நேற்றைய ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டிய நெருக்கடி நியூசிலாந்துக்கு இருந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 5 இலக்குகளை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றது. நிக்கொல்ஸ் அதிகபட்சமாக 36 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சாய்புடின் 2 இலக்குகளையும், மெகடி ஹசன், முஸ்டபிஷுர் ரகுமான், மகமதுல்லா மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி வெறும் 76 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 52 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. முஸ்டபிஷுர் ரகுமான் பெற்ற 20 ஓட்டங்கள்தான் அதிகபட்சம். அஜாஸ் பட்டேல் நியூசிலாந்தின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்தார். அவர் 4 பந்துப்பரிமாற்றங்களை வீசி 16 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

தொடரில் இரு ஆட்டங்கள் எஞ்சியுள்ளன. நியூசிலாந்து அணி கிண்ணம் வெல்வதற்கு அந்த இரண்டு ஆட்டங்களிலும் வெற்றிபெற வேண்டும் என்ற நிலையும், பங்களாதேஷ் அணி கிண்ணம் வெல்வதற்கு இரண்டில் ஓர் ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நிலையும் உள்ளது. (ம)

# நடுவருடன் வாக்குவாதம்: ராகுலுக்கு அபராதம்!



லண்டன், செப். 6

நடுவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டமைக்காக இந்திய அணியின் ஆரம்ப வீரர் கே.எல். ராகுலுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஓவல் மைதானத்தில் இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்காவது டெஸ்ட் ஆட்டம் இடம்பெற்றுவருகின்றது. நேற்றுமுன்தினம் இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடியபோது ராகுல், அண்டர்சனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். பந்து துடுப்பு மட்டையில் உரசிச்சென்றமை தெளிவாகத் தெரிந்தது. ஆனால் ராகுலோ அதை ஏற்க மறுத்து நடுவருடன் வாக்குவாதம் செய்தமை ஐ.சி.சி. விதிகளின்படி குற்றமாகும். ராகுலும் தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து இந்த ஆட்டத்துக்கான கட்டணத்தில் 15 வீதம் அவருக்கு அபராதமாக விதிக்கப்பட்டது. (ம)

# இலங்கை-தெ.ஆபிரிக்கா நாளை இறுதி மோதல்!

கொழும்பு, செப். 6

இலங்கை - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் நாளை இடம் பெறவுள்ளது.

முதலிரு ஆட்டங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியைப் பெற்றுள்ளன. இந்த நிலையில் தொடரின் மூன்றாவது ஆட்டம் நாளை இடம்பெறுகின்றது. இந்த ஆட்டத்தில் எந்த அணி வெற்றிபெறுகின்றதோ அந்த அணியே கிண்ணம் வெல்லும். ஆதலால் இந்த ஆட்டத்தின் மீது பெரும் எதிர்பார்ப்பு நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



# ஜோகோவிக் முன்னேற்றம்

வொஷிங்டன், செப். 6

அமெரிக்கப் பகிரங்கத் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்குத் தகுதிபெற்றார் சேர்பிய வீரரான நொவக் ஜோகோவிக்.


நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் ஜோகோவிக்கை எதிர்த்து ஜப்பான் வீரர் நிசிகோரி மோதினார். முதலாவது செற்றை 7:6 என்ற அடிப்படையில் நிசிகோரி கைப்பற்றினார். இதன்பின்னர் தன்னைச் சுதாகரித்துக்கொண்ட ஜோகோவிக் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்த ஆரம்பித்தார். அடுத்த மூன்று செற்களையும் முறையே 6:3, 6:3, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்குத் தகுதிபெற்றார் ஜோகோவிக். (ம)

# ரவிசாஸ்திரிக்கு கொரோனா

லண்டன், செப். 6

இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் ரவி சாஸ்திரிக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையிலேயே அவருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து அவருடன் தொடர்பில் இருந்த மூவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு பயிற்சியாளர்களே தனிமைப்படுத்தப்பட்டவர்கள். (ம)



## அமெரிக்கப் பகிரங்கம்

# நடப்புச் சம்பியன் ஒசாகா தோல்வி!



வொஷிங்டன், செப். 6

அமெரிக்கப் பகிரங்கத் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் மூன்றாவது சுற்றுடன் வெளியேற்றப்பட்டார் தரப்படுத்தலில் மூன்றாவது இடத்தில் இருப்பவரும் நடப்புச் சம்பியனுமான நவொமி ஒசாகா.

ஜப்பான் வீராங்கனையான ஒசாகாவை எதிர்த்து தரப்படுத்தலில் 73ஆவது இடத்தில் உள்ள லேலா பெர்னாண்டஸ் மோதினார். முதலாவது செற்றை 7:5 என்ற செற் கணக்கில் ஒசாகா வெற்றிபெற்றாலும், அடுத்த இரு செற்களிலும் லேலா மிகச் சிறப்பாகச் செயற்பட்டு அந்த செற்களை 7:6, 6:4 என்ற அடிப்படையில் கைப்பற்றினார். முடிவில் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார் லேலா. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org